விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

RECEIVED 23-4-1984 PERIODICALS LIBRARY

## பரந்தனில் ரயில்பாதை சீரானதும் சாவகச்சேரி வரை கடுகதிச் சேவை நடக்கும்

(யாழ்ப்பாணம்)

பரந்தனில் பாதைகள் பழுது பார்க்கப்பட்டு வருவதாகவும் இது முடிந்தவுடன், தற்போது கிளிநொச்சிவரை நடைபெறும் கடுகதி ரயில் சேவையை சாவகச்சேரிவரை நடத்துவதுபற்றி முடிவு செய்யப்படும்.

போக்குவரத்து பதில் அமைச்சர் திரு. எஸ். குலரத்தின அமைச்சர் செ. இராசதுரையிடம் தெரிவித்துள்ளார்.

கடுகதி சேவையை சாவகச்சேரி வரை நடத்துமாறு யாழ் பிரஜைகள் குழுவினர், பிரத

(16ம் பக்கம் பார்க்க)

மலர் 26 சித்திரை 10 றஜப் 19 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 22—4—84 இதழ் 67

# யாழ். நகரில் பீதியும் பரபரப்பும் ஏற்படுத்திய திடீர் வதந்தி!

## பட்டப்பகலிலேயே ஊர் அடங்கிய பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

**கடற்படைவீரர்கள் சிலர் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டதையடுத்து நேற்று நகரில் அர்த்தமற்ற விதத்தில் வதந்திகள் பரவியதால் மக்கள் பீதி கொண்டு அவசர அவசரமாக வீடுகளை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.**

கடைகள் எல்லாம் வேகமாகப் பூட்டப்பட்டன. சிறிது நேரத்தில் நகர் வெறிச்சோடி விட்டது.

காயமுற்ற கடற்படை வீரர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டதைப் பார்த்தவர்கள் வேறுவிதமாகக் கதைகளைப் பரப்பியதால் மக்கள் பீதிகொள்ள நேர்ந்தது. சிறிது நேரத்தில் காட்டுத் தீப்போல் இக்கதை பல இடங்களுக்கும் பரவியது. இதனால் எங்கும் பரபரப்பு காணப்பட்டது.

'ஈழநாடு' காரியாலயத்துடன் டெலிபோனில் தொடர்பு கொண்ட பலர் உண்மை நிலையை அறிந்து நிம்மதியடைந்தனர்.

0 0

கடந்த வியாழக்கிழமை யாழ் நகரத்தில், மாலை 6 மணிக்கு பல இடங்களில் சோதனை நடைபெற்றது. 6 மணிக்கு பின்னர் எவருமே வெளியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது இதனால், அன்றுபலவர்த்தக நிலையத்தில் கடமையாற்றிய ஊழியர், வர்த்தக நிலையத்திலேயே தங்கவேண்டி ஏற்பட்டது. இதனால் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னரே கடைகளைப்பூட்டி விட்டுச் சென்றுவிட்டார்கள்.

வியாழக்கிழமை மாலை யாழ் நகரிலுள்ள போசனசாலை ஒன்றில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் பலத்த சோதனைக் குட்படுத்தப்பட்டார்கள்.

வீதிகளிலும், சோதனை நடைபெற்றது. அரசாங்க காரியாலயத்தில் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்களும் விசாரணைக்குட்படுத்தப் பட்டார்கள்

கடைகள் யாவும் 3 மணிக்கு முன்னரே பூட்டப்பட்டுவிடுவதாலும், கடைகளில் மக்களுக்குத் தேவையான அரிசி, சீனி, மா மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு

[16ம் பக்கம் பார்க்க]

## கடற்படை வீரரின் துப்பாக்கி வெடித்து 3வீரர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

கடற்படை வீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததின் காரணமாக அவருடனிருந்த மூன்று வீரர்கள் கடுமையாகக் காயமுற்றனர்.

காரைநகரிலிருந்து கடற்படை வீரர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வருகையில் [illegible] இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகின்றது.

கடற்படை வீரர் ஒருவரின் "சப்மெஷின்கன்" தற்செயலாக வெடித்ததனால் அமரவீர (35) வீரசிங்க (28) தசநாயக்க (36) ஆகிய மூன்று வீரர்களும் பலத்தகாயங்களுக்குள்ளானதாகத் தெரிகின்றது.

இவர்கள் மூவரும் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு பலத்த பாதுகாவலுடன் கொண்டுவரப்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதின் பின் திருப்பிக்கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## தேடுதலின்போது வீரருக்கு காயம்

(வவுனியா)

வவுனியா குடியிருப்புப்பகுதியில் நேற்று ராணுவமும் பொலிசாரும் இணைந்துபலத்த தேடுதல் வேட்டையொன்றை நடத்தினர்.

இத்தேடுதலின்போது உதயபத்திரன என்ற 35 வயது ராணுவவீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்து அவருக்குக் கையில் காயமேற்பட்டதனால் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

## மினிபே கால்வாய் திட்டத்தை ஜனாதிபதி திறந்துவைத்தார்

(கொழும்பு)

மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டத்தினை தற்போதைய அரசாங்கம் துரிதப்படுத்தியது போன்று வேறு எந்த அரசாங்கமும் செயற்படுத்தவில்லை என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கங்கை நீரை மினிப்பே கால்வாயில் திறந்துவிடும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாரிய திட்டமான மகாவலித்திட்டத்தின் இந்த அரசு திட்டமிடற்பாடு, திறமை, தீர்க்கதரிசனம் ஆகிய நற்பண்புகளின் அடிப்படையில் செயற்படுத்தியமையினால் இத்திட்டம் மாபெரும் வெற்றியை அளித்துள்ளது. இதனால் இலங்கை விவசாயம், மின்சாரம் ஆகிய துறைகளில் பாரிய அபிவிருத்தியை கண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மினிப்பே கால்வாய் திட்டம் 60 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. (கு)

யாழ். சைனீஸ் றெஸ்ரறேன்ற்

YARL CHINESE RESTAURANT

124, R. R. நல்லையா வீதி

(முன்னைய முதலாம் குறுக்குத் தெரு)

இங்கு 50 வகைக்கு மேற்பட்ட சீன மற்றும் மேல்நாட்டு உள்நாட்டு உணவு வகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் ஓடர் செய்து 30 நிமிடங்களில் சுடச்சுட நியாயமான விலைக்குப் பெற்று உண்டு மகிழலாம்.

இத்தாபனத்தில் தங்குமிட வசதி வெகு விரைவில் ஒழுங்கு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தினசரி காலை 10-30 மணி தொடக்கம் திறந்திருக்கும்.

YARL CHINESE RESTAURANT

124, R. R. NALLIAH ROAD, JAFFNA.

(1587)

## கண்காணிப்பு வலயத்தை மீறி இந்திய மீனவர் மீது தாக்குதல் நடக்கிறதாம்

(சென்னை)

இலங்கையின் கடற்பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு வலயத்தில் ரோந்து சேவை புரியும் இலங்கை கடற்படையினர் தமது எல்லையை மீறி [illegible] தாக்கி [illegible] என்று இராமநாதபுரம் மீனவர் சங்கத் தலைவர் புகார் செய்துள்ளார்.

இச்சங்கத்தின் தலைவர் திரு எஸ் மாரிமுத்து இதுபற்றி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை தொடர்ச்சியாக தாக்கி வருகின்றார்கள். ஆயினும் தற்போது இந்த தாக்குதல் அதிகரித்துள்ளது.

கடற்படையினர் "தமிழீழப் புலிகளை" நாசுக்காக கூறிக்கொண்டு இந்திய மீனவர்களைத் தாக்கி [illegible] இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கைட்டி அம்மன் கோவிலுக்கு அருகில், காங்கேசன்துறை வீதியிலிருந்து இருநூறு யார் தூரத்தில் ஒன்றரைப் பரப்பு காணி விற்பனைக்குண்டு P. ஜெயரத்தினம், துர்க்கா வெல்டர்ஸ், இல்லர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் 1944

நல்ல நிலையிலுள்ள 8 Sri மொரிஸ் ஒக்ஸ் ஒக்ஸ்போர்டு கார், ஈச்சமோட்டை வீதியில் வீடுகட்டுவதற்கு உகந்த 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. C. T. N. லோறன்ஸ் 10, முதலாம் ஒழுங்கை ஈச்சமோட்டை, பீச்றோட், யாழ்ப்பாணம். 1918

இறைச்சி கோழிகளும் முட்டைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அன்னை பாம் [கிளி] செம்மாதெரு, யாழ்ப்பாணம் 1925

நல்லின அல்சேசன் நாய்க்குட்டிகளும் இரண்டு வயதுடைய பொமரேனியன் கடுவன் விற்பனைக்குண்டு 29/17, தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். 1916

தையிட்டி 4-ம் வட்டாரத்தில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வி. கிருஷ்ணபிள்ளை கேசரி ரோட், தையிட்டி, காங்கேசன்துறை. 1917

சொக்குவில் ராசயில் அருகாமையில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அ. குணசிங்கம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை. [1913]

சிறிய குளிர்சாதனப்பெட்டி R/60, நாஷனல் பனுசோனிக் கலர் T. V. 22" (அன்ரனுவுடன்) சன்யோ 2 பேனர் குக்கர் (கிறிலுடன்) Hermes portable டைப்ரைட்டர், மெத்தைகள் முதலியன உடனடியாக விற்பனைக்குண்டு எல்லாம் புதியவை. 14, சென் பீற்றேர்ஸ் லேன். (முதல் மேல்மாடி வீடு) [1902]

சாவகச்சேரி கண்டி வீதி 304 கி மீ கட்டைக்கு முன்பாக சுற்றுமதில்கள் அடைக்கப்பட்ட மின்சார வசதியுடனும் நல்ல தண்ணீர் கிணற்றுடனும் 5 பரப்புக்காணியுடன் சகல வசதியுள்ள கல் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 2, கல்வடி லேன் (M. P. லேன்) சாவகச்சேரி அல்லது K. B. சுந்தரம் 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1895

நாட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் றோட்டுக்கரையில் பனையுடன் 80 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரிலோ தபால் மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். திருமதி ப. அமலசபை, வணிக்கவளவு, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் 1945

## விற்பனைக்கு

Bairaha Farms Hisex பேட்டுக்குஞ்சுகள். சேவல் குஞ்சுகள் 23-4-84 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். ந. சற்குணராசா பிறதர்ஸ், ஸ்ரேசன் றோட், பிரம்படி, கொக்குவில். 1936

நல்லநிலையில் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றக்கூடியவகையில், எஞ்சின் சமீபத்தில் சீரமைக்கப்பட்ட புது டயர்களுடன் போட் கொன்சல் மார்க் II - 1 ஸ்ரீ தொடரில் கார் விற்பனைக்குண்டு. 331, கோயில் வீதி, நல்லூர். 1921

உடுப்பிட்டி மருதமடம் வீதியல் இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வி. குணரத்தினம், உடுவில் கிழக்கு, இணுவில் 1933

அக்கராயன்குளம் கிளிநொச்சியில் 10 ஏக்கர் நெற்காணி, 5 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. [ஆசிரமத்தை பிரசுக்கு அருகாமை] ரட்ணம், 28/2, கண்டி றோட், சுண்டுக்குளி 1928

நெற்காணி 44 பரப்பு. வறணிக்கு சமீபமாக. பருத்தித்துறை - கொடிகாமம் வீதி. விலை கூறி விண்ணப்பிக்கவும். 7/16, ஹரிச்சந்திரமாவத்த, வெள்ளவத்தை. 1938

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 396 கே. கே. எஸ் வீதியிலுள்ள 1 1/4 பரப்பிற்குட்பட்ட வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும். 1939

ஒரு கடையுடன் இன்னும் ஒரு கடை ஒன்றுகட்டக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு இடம் சண்டிலிப்பாய் ஐந்து சந்தி அருகாமையில். லிஸ்வம்ஸ் பார்மஸி, சண்டிலிப்பாய். 1951

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையிலும் பாடசாலைக்கு கிழக்கு புறமாகவும் பிரதான வீதியில் இருந்து 50 யார் தூரத்தில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: விளம்பர இலக்கம் 1948, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1948

E L F 250 வான் 16 சிறி தொடர்பு இலக்கம் உடையது. விற்பனைக்குண்டு. செ. தர்மராஜா, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு 1946

## தேவை

கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு இருபாலாரும் தேவை தங்குவதற்கு இடவசதியுண்டு தேவன்மில் 159/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1927

## அறிவித்தல்

யாழ்ப்பாணக்கல்லூரி

தொழில்நுட்ப நிறுவனம்

வட்டுக்கோட்டை.

இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் நடைபெறவிருந்த இறுதி தவணைப் பரீட்சைகள் முறையே 25-ம், 26-ம் திகதிகளில் நடைபெறும்.

இயக்குனர்.

(1960)

## விற்பனைக்கு

தோட்டக்காணி அல்லது திருத்தி எடுக்கக்கூடிய பெரிய நிலப்பரப்பு யாழ். நகருக்கு அருகாமையில் அல்லது சுமார் 7 மைலுக்கு உட்பட்டதாக உடனே தேவை. பரப்பளவு - இடம் - எதிர்பார்க்கும் விலை குறிப்பிட்டு எழுதவும். மா, பலா புளி முதலிய பெரும் விருட்சங்கள் செழித்து வளரக்கூடிய காணியும் தேவைப்படுகிறது. எவ்விதகாணியாகிலும் 25 பரப்புக்கு மேலானால் பெரிதாயினும் விண்ணப்பிக்கவும். த. பெ. 393 கொழும்பு. 1892

## தவறிவிட்டது

சுன்னாகத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வி. யோகநாதன் என்பவருக்கு சொந்தமான சாரதி அனுமதிப் பத்திரமும், தேசிய அடையாள அட்டையும் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் அவற்றை ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் தரப்படும். 1940

## காணவில்லை

சுக்கள் வங்கி ஸ்ரான்லிவீதி கிளை காசோலை ஒன்று ரூபா 35,000/- தவறுதலாக காணாமல்போய்விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் லிஸ்வம்ஸ் பார்மஸி, சண்டிலிப்பாய் 1952

## தேவை

பண்டத்தரிப்பு பிரசித்தபெற்ற பெரியவளவு முருகமூர்த்தி கோவிலுக்கு குருக்கள் தேவை. நல்ல அனுபவமும், சாந்த குணமும், பொறுமையுடையவர்களும் உடனடியாக விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு கோவில் நிர்வாகசபையுடன் தொடர்புகொள்ளவும். வ. செல்லத்துரை, தலைவர், இளைப்பாறிய கச்சேரி O. A. 1929

விஸ்வகுல 42 வயதான தாரமிழந்த விற்பனையாளருக்கு கல்வியறிவும் நற்பண்பும், குடும்பத்தை பராமரிக்கக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட மணமகள் தேவை. சீதனம் இல்லாத குடும்பப் பொறுப்பற்ற தாரமிழந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் 1932 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1932

## வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கில் இரண்டு அறையுடன் கூடிய சகல வசதிகளும் உடைய பகுதிவீடு வாடகைக்கு உண்டு சந்திரூஸ் ஸ்டோர்ஸ், பலாலி வீதிச்சந்தி, கோண்டாவில் கிழக்கு. 1934

## சேவை

முத்திரைச்சந்தை நல்லூரிலிருந்து சென். பொஸ்கோ கண்டிக்குளி, சென்ஜோன்ஸ், நகரிலுள்ள பாடசாலைகளுக்கு சொகுசான வான்வசதி அளிக்கப்படும். விண்ணப்பத்தில் பாடசாலை தொடங்கும் முடியும் நேரம் அறியத்தரவும். சகாதேவன் 29/3 நக்கா வீதி, (பொஸ்கோ முன்பாக). 1955

## வாடகைக்கு

மானிப்பாயில் நவீனவசதி கள் கொண்ட அனெக்ஸ் வாடகைக்கு விடப்படும், சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. விளம்பர இல: 1903 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1903

## தாகூர் பிரார்த்தனை

ரவீந்திரநாத் தாகூர் தமது கீதாஞ்சலியில் இறைவனிடம் வேண்டுகிறார்.

"என்னுடைய பலவீனங்களை அடியோடு களைந்துஎடுக்கச் சக்தியைக்கொடு. என்னுடைய சுகதுக்கங்களை ஒன்றாகப் பாவிக்க சக்தி கைக்கொடு என்னுடைய அன்பு சேவையில் பலனளிக்க சக்தியைக்கொடு. தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து என்மனத்தைமேலாக்க சக்தியைக் கொடு.

## விசேட அறிவித்தல்

G. S. Q., G. A. Q., 1st in Law 1st in Commerce

விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

- பகல் நேர பிரிவுகள்; 30-4-84 காலை 9-00
- வார இறுதிப் பிரிவுகள்! 28-4-84 காலை 8-15

○ ஆய்வுகூடம், நூல்நிலையம், நிரந்தரவிரிவுரையாளர் குழு உட்பட சகல வசதிகளையும் உடைய ஓரே ஸ்தாபனம்

விபரங்கட்கு!

**FINANCIAL ASSOCIATION**

402 1/2, K. K. S. Road, Jaffna.

(Near Sivan Temple)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம்

இரண்டாயிரத்து முந்நூறு (2300) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சமாசத்தில் பெற்றுக்கொண்ட பத்திரத்தில் "பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 25-4-84-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் 24-4-84 பகல் 12.00 மணி வரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 75/- வைப்புப் பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,

ஊர்காவற்றுறை,

19-4-84. 1941

எண்ணற்ற ரசிகர்களை தன்னகத்தே வைத்திருக்கும் வீடியோ பிரசாத்தின் நாளைய வெளியீடு!

பாண்டியன் - ரேவதி நடித்த பாரதிராஜாவின்

# "மண் வாசனை"

பிரதிகளிற்கு முந்துங்கள்: **வீடியோ பிரசாத்**

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

49, முனீஸ்வரன் வீதி யாழ்ப்பாணம் 1950

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்

★ சுவிற்சலாந்து ★ கனடா

சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும் பிரயாண ஒழுங்குகளுக்கும்

**AIR-TRANSIT**

TRAVEL CONSULTANTS

99-2/56 B, கபூர் பில்டிங் 2-வது மாடி கொழும்பு-1.

538 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22689

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள மாயக்கை என்னுமிடத்தில் தரைக்கீழ்க் குகையொன்றில் "கற்காலத்திற்குரிய கருவிகள்" கண்டுபிடிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருவதாக ஈழநாடு பத்திரிகையின் (24-1-1984) தலைப்புச் செய்தி குறிப்பிடப்பட்டிருந்தது. இச்செய்தி யாழ்ப்பாணத்தவர்களையும், இலங்கை - இந்தியத் தொல்லியலாளர்களையும் மாத்திரமன்றி, சர்வதேசத் தொல்லியலாளர்களையே அதிசயிப்பிற்குள்ளாக்கக் கூடியதொன்றாகும்.

சுண்ணாம்புக் கல்லின் தேய்மானம் மிக அதிகமானதாகும். கற்காலத்துச் சுண்ணக்கல் தயாரிப்புகள் இன்றுவரை தரைக்கீழ் நீரினுள் அவற்றின் உள்ள அடையாளங்கள் கரையாது இருந்திருக்குமோ என்பதும் கேள்விக்குறி.

பழைய கற்காலம் எனப்படுவது பலிச்சரிகவியல் ரீதியாக "பிளிஸ்ரோசின்" காலத்திற்குரியது (10,000 ஆண்டுகளுக்கு முன் 30 லட்சம் ஆண்டுகள் வரை) கற்காலக் கருவிகள் பிளிஸ்ரோசின் காலத்திற்குரிய மண்படைகளில் மறைந்த கொண்டுத் தரைக்கீழ்க் குகை போன்று காணப்படுகின்றது. மழைகாலத்தில் வெள்ளப் பெருக்கு இக்குகையுள் ஓடி மறைவதால் கிடைத்த மண் அடுவுகள் குகையின் ஒரு பகுதியை மூடியுள்ளன.

இப்பகுதி முழுவதுமே கல்லுடைப்பதற்குப் பிரபலமானதொரு இடமாகும். நல்ல தரமான வைரவெள்ளைக் கற்பாறைகள் இடையிடை காணப்படுவதால் இப்பொழுதும் ஜல்லிகள், சல்லிக்கள், காட்டுக்கள் உடைக்கும் வேலை இங்கு நடைபெறுகின்றது.

# மாயக்கைக் குகையில்

# கிடைத்தவை

# கற்காலக் கருவிகளா?

**பொ. இரகுபதி**

**வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்**

இக்கருவிகள் குறுணிக்கற் கருவிகள் அல்லவென்று அதற்கும் மூத்தகருவிகளின் தோற்றமுடையனவென்றும் யாழ்ப்பாணத்துச் சுண்ணாம்புக்கல்லின் ஒரு ரகமான வைரவெள்ளைக் கற்களால் ஆனவை எனவும் கேள்வியுறுகிறேன்.

இலங்கையின் எப்பாகத்திலும் இதுவரை நிரூபிக்கப்படக் கூடியதாக குறுணிக்கற்காலம் தவிர்ந்த கற்காலக் கருவிகள் பெறப்படவில்லை மிகப் பழமை வாய்ந்ததாக இலங்கையிற் கிடைத்தவை இடைக்கால அதாவது குறுணிக்கற்காலக் கருவிகளே. மிக அண்மையில் (1980) பேராசிரியர் கெனடி எழுதியுள்ளகட்டுரையொன்றிலும் தென்னாசியாவின் தென்கோடியில் பழைய கற்காலக் கருவிகள் காணப்படாமைக்குரிய காரணங்களை ஆவியுள்ளார்.

உயிர்ச்சுவடுகளுடன் காணப்படுபவையாகும். இந்தியாவில் நிரூபிக்கப்பட்ட கற்காலக் கருவிகள் இவ்வாறே பெறப்பட்டன. பழைய கற்காலக் கருவிகள் பிளிஸ்ரோசினுக்குரியதென நிறுவப்பட்ட மண்படைபொன்றிலிருந்து உரிய உயிர்ச் சுவடுகளுடன் பெறப்பட்டிருந்தால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை, இக்கருவிகள் பிளிஸ்ரோசினுக்குப் பின் ஹோலோசின் காலத்தில் எச்சசொச்சமாயிருந்ததொரு பண்பாட்டிற்குரியதெனக் கொண்டாலும், அதுவும் உரிய மண்படையில் மற்றும் பண்பாட்டெச்சங்கள் மூலம் நிறுவப்பட வேண்டும்.

ஏறத்தாழநூறு ஆண்டுகளுக்கு முன் நாலு சந்திப்பிள்ளையார் கோயிலுக்கு இங்கிருந்து கல் உடைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் மாயக்கைக்கு மிக அணித்தாகவுள்ள கலுந்தான் கோட்டை என்ற இடத்தில் சில நூறு ஆண்டுகளுக்கு முன்செல்லக்கூடிய மதில் இயக்கால கட்டிடச் சிதைவுகள் காணப்படுகின்றன. இதற்குத் தேவையான கற்கள் கூட இங்கிருந்து உடைக்கப்பட்டிருக்கலாம். குகைக்கு எதிராகத் தண்ணீர் தேங்கி நிற்கும் குளத்து வெளியே கல்லுடைத்ததால் வந்திருக்கலாம். இத்தகைய அமைப்புக்களை இன்னும் யாழ்ப்பாணத்தில் கல்லுடைக்கும் குவாறிகளிற் காணலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் பழைய கற்காலத்திற்கும் பிந்திய குறுணிக்கற்காலங்கூட இதுவரையில் அறியப்படவில்லை, இப்படியிருக்கையில் "ஈழநாடு" பத்திரிகையில் வெளியாகியுள்ள கண்டுபிடிப்பு மிகுந்த கவனத்துடன் அணுகப்படவேண்டியதாகும்.

இந்தியாவில் பழைய கற்காலக் கருவிகள் பெரும்பாலும் குவாட்டசைட் கற்களால் அல்லது ஏனைய சிலிக்கேற் கற்களால் தயாரிக்கப்பட்டவை. மயோசின் சுண்ணாம்புக்கற்களால் கற்காலக் கருவிகள் தயாரிக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. கருவித் தயாரிப்பிற்கு இச்

மாயக்கையில் எடுக்கப்பட்டதாக அறியப்படும் கருவிகளைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை எனினும் எடுக்கப்பட்ட இடத்தைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. இப்பகுதி முழுவதும் தரைக்கீழ்ச் சுண்ணாம்புக் குகைகள் நிறைந்ததொன்று. இது யாழ்ப்பாணத்தில் இயற்கையாகக் காணப்படுவதாகும். மாயக்கையிற் சில இடங்களில் இக்குகை மூடுகள் பொறிந்து விழுந்ததால் ஏற்பட்ட பள்ளங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் குளத்தை

எவ்வாறாயினும் கடந்த பல காலமாக மாயக்கை கல்லுடைக்கும் குவாறியாக இருந்து வந்திருப்பது தெளிவானதொன்று.

யாழ்ப்பாணத்துக் குவாறிகளில் வெள்ளைக் கல் உடைப்பவர்கள் நல்ல தரமான வைரக் கற்கள் வரும்பொழுது அவற்றை பொழிகற்களாக அல்லது கட்டிட அத்திவாரத்திற்குப் பயன்படும் கடைசார் கற்களாகவோ, சல்லிக் கற்களாகவோ உடைப்பதுண்டு. கடைசார் கற்கள் உடைப்பதற்குப் பயன்படுத்தும் முறை ஏறத்தாழ கற்காலக் கருவி தயாரிக்கும் முறையே. குவாறிகளிலேயே வைத்து இவ்வாறு கற்கள் உடைக்கப்படுவது வழக்கம். எனவே கற்காலக் கருவி வடிவங்களை ஒத்த பல கற்கள் இத்தகைய இடங்களில் காணப்படுவது வியப்புக்குரியதன்று.

இக்குகைப்பகுதியைப் பார்வையிட்ட பொழுது பழைய கற்காலக் கருவிகளைப்போலவே தோற்றமளிக்கும் பல கற்களை மேலெழுந்தவாரியாக காணக் கூடியதாக இருந்தது. இது எந்த ஒரு குவாறியிலும் பொதுவாகக் காணக்கூடியதொன்று. கற்காலக் கருவிகளை ஒத்த பெருந்தொகையான கற்களையும் தரைக்கீழ் குகைகளையும் இன்றும் வைர வெள்ளைக்கல் உடைக்கும் வேம்பிராய் குவாறியில் காணலாம்.

எனவே வடிவத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு கற்காலக் கருவியெனத் தீர்மானிப்பது அதுவும் குவாறிப்பகுதியில் இவ்வாறு தீர்மானிப்பது மிகவும் கண்டிப்பான கவனத்துடன் ஆராயப்பட வேண்டியது. கற்கால ஆய்வுகளில் இவ்வாறு ஏற்படக்கூடிய தவறுகள் குறித்து ஏற்கனவே பல தொல்லியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் கற்காலக் கருவிகள் பற்றி முதன் முறையாகப்பேசும்பொழுது அவை உரிய மண்படைகளில் கிடைக்கின்றனவா என்பதும், உயிர்ச்சுவடுகளுடன் கிடைக்கின்றனவா என்பதும், உணவுச்சிதல்கள் போன்ற பண்பாட்டெச்சங்கள் காணப்படுகின்றனவா என்பதும், இக்கற்கள் கருவிகளாகப் பயன்படுத்த வேண்டும் என்ற தன்னுணர்வுடன் தயாரிக்கப்பட்டதற்குரிய அடையாளங்கள் உடையனவா என்பதும் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டியவை.

யாழ்ப்பாணத்தில் கற்காலத்தைத் தேடி நடாத்தப்படும் ஆய்வுகள் வரவேற்புக்குரியவை. பாராட்டிற்குமுரியவை. திறந்த மனதுடன் அணுகப்பட வேண்டியவை. எனினும் முறையாக நிறுவப்படாமல் "கற்காலக்கருவிகள்" என இவற்றிற்கும் பெயரிடுவது, யாழ்ப்பாணத்து ஆய்வாளர்கள் தொல்லியலாளர்களின் கண்டனத்திற்கு உள்ளாவதற்கு வழிவகுக்கும்.

## பசும் பொன்னாவோம்

பொற்கொல்லர் பொன்னை உரைகல்லிற் தேய்த்து மாற்றுப்பார்க்கிறார்கள். அதன் சுத்தத்தன்மைபற்றித் திருப்தியில்லையெனில் அதை நெருப்பிலிட்டுச் சுத்தியால் அடித்துக் கலப்பு உலோகத்தை அகற்றிவிடுகிறார்கள். அப்புறம் பசும்பொன் மாத்திரம் நிற்கிறது.

இலங்கை வாழ் தமிழர் - இன்று குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் அனைவரும் இத்தகைய சோதனைக்காளாகி வருகின்றனர். அடியுண்டு கொலையுண்டு, உடமை அழிக்கப்பட்டு, அபகரிக்கப்பட்டுத் தாக்கோணுதல் பத்துக்குட்படுத்தப்படுகின்றனர்.

மனிதனின் பிறப்பையும் இறப்பையும் நினைவு கொண்டு மூன்றாவது முக்கியமானதான உயிர்ப்பை மறந்து விடுகிறோம்.

இயேசுபிரான் உயிர்த்த திருநாளாகிய இன்றைய இறப்பின்மேலான உயிர்ப்பு உயிருக்கு உண்டென்பதை சந்திப்போம்.

துன்பப்படாத எந்தநாடோ சமூகமோ தனிமனிதனோ உயர்வடைந்ததில்லை.

மயானத்தில் கல்லறைகள் உண்டானால்தான் உயிர்த்தெழுவது சாத்தியமாகும்.

## அமரர் தனிநாயகத்திற்கு 'இலக்கிய முதுமுனைவர்' பட்டம்

தமிழ் நாட்டில் கடந்த முப்பது மாதங்களாக இயங்கும் தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம் மார்ச் 24 ஆம் திகதி முதல் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் இலக்கிய முதுமுனைவர் என்ற பட்டத்தை அமரர் தனிநாயகம் அடிகளாருக்கு நினைவஞ்சலியாக வழங்கியது. தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள், உலகில் பரந்த நாற்பதுநாடுகளில் தமிழ்பேசும்மக்களிடையே நிலவும் இடைவெளியை இணைப்பதாகும்.

பட்டம்பெற்றவர்களில் ஏனையோர்: எஸ். தண்டபாணி தேசிகர் (மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்), எம். எம். பெரி சுவிசர் வித்பதி (சென்னை), திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை (நாதஸ்வர மேதை), எஸ் அவிநாசிலிங்கம் செட்டியார் (பிரிவுமுன் இயங்கிய சென்னை மாகாணக்கல்வி கல்வி அமைச்சர்).

## பப்பா மரங்கள் வளரட்டும்

முற்றத்தில் வேலியோரத்தில் கிடையினமான பப்பா மரங்கள் அட்டாலம் இடம்பெறக் காலம் வந்துள்ளது ஒருவேளை உணவாக உண்டு பசிதீர்த்து உடல்வலுப்பெற, பப்பாப் பழம் போதுமானது. இன்று பப்பாப் பழத்தை தேடித்தெருவோரங்களில் விற்பவரிடம் சென்றுநல்லவிலை கொடுத்து வாங்கும் காலம் வந்துள்ளது. தாமே

(18ம் பக்கம் பார்க்க)

## விண்ணேகிய வேந்தன்

உயிரேயி நசரேனென
ஒருகல் லறை யடியில
அயர்வோ ரு சிறைவைத்தனர்
அறித் திகி லடைய
துயருதிட மிக வாடிய
துணைவர் திரள் மகிழ
வெய்ய னொளிர் கூடவே டுனர்
விண் ணேகிய வேந்தன்

- காவலன்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ. சண்முகலிங்கம்



# பௌர்ணமி தினம்

''காதல்,, கொள்ள வேண்டும் என்பதிலெல்லாம் எனக்கு விருப்பமில்லை.

''அப்படியானால்?...

''உங்களுக்கு விளங்கவில்லை என்கிறீர்களாக்கும். நான்... சுருக்கமாகச் சொல்வதானால் காதல் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. வெறுப்பு''

''உன்னை விரும்புகிறேன்'' என்று நான் அவளைப்பார்த்துச் சொன்னதற்கு, அவளின் பதில் இது.

நான் சைக்கிள் உருட்டிய படி வீடுவந்து சேர்ந்தேன்.

இதுவரைநாள் நானும், அவளும் நல்லமுறையில் பல விசயங்களையிட்டுக் கதைத்திருக்கிறோம். அவள் குசினிப் பெண்ணாகமட்டும் இருக்கவில்லை என்பது அவளின் பேச்சுமுறை, வாதத்திறன் என்பவற்றில் இருந்துதெரிந்து கொண்டேன். எனது விருப்பமும் அதுதான். என்னைப் போல எனக்கு எவ்வளவு விஷயங்கள் தெரியும் என்பது வேறு. இதில்நான் 'அறிவு' என்றதூரத்துக்குச் செல்லவில்லை- என்னைப்போல விளக்கங்களை உடையவளை மனைவியாக்கவே விருப்பம். இது அவளுடன்நான் பழகநேர்ந்த அந்தக்குறுகிய காலத்துள் எனக்குள் ஏற்பட்டமுடிவாகவும் இருக்கலாம்.

அவளும் நானும் பலவிஷயங்களையிட்டு நன்றாக ஆராய்வோம். நீண்டநேரங்களுக்குப்பிறகு, சரிபோவோமா என்று அவள் சொல்லும் போதுதான், அவளுடன் கதைத்துக் கொண்டிருந்த அந்தளவு நேரமும் என்மனதுள் இருந்து அடிக்கடி ஓடி ஓடி வந்து என் நாவில் நின்று வெளிவரமுயற்சிக்கும் அந்த வார்த்தையை அவளிடம் சொல்லமுடியாமல் போய்விடுவதஏன் என்று அறியாமலே நான் இருந்து- சரிபோவோம் பிறகு சந்திப்போம் என்று கூறி- வந்துவிடுவேன்.

இப்படிநீண்ட நாட்களாகவேநடந்து வந்தது.

இன்றுதான் அதைக்கேட்க முடிந்தது, கேட்டுவிட்டேன். நீங்கள் நம்புவீர்களோ தெரியாது. சிலர்வீடுகளில் கிளிகளைக்கூட்டில்வளர்ப்பர் சிலர் குயில், வேறுசிலர் முயல், அணில் இப்படி...... ஆனால் நான் எதனையும் இப்படி வளர்ப்பதில்லை. அந்தப்பிராணிகளில் விருப்பமுமில்லை ஆனாலும் சிலவேளைகளில் குரங்குக்குட்டியை வளர்க்கப் பெரிதும் விரும்பிஇருக்கிறேன் அதன் அழகை ரசிக்கிறேன். அங்கசேஷ்டைகளைப் பெரிதும் விரும்புகிறேன். அதற்கும் எமக்கும் சம்பந்தம் இருப்பதனாலோ என்னவோ அறியேன்.

அழகைவைத்து, பணத்தை வைத்துக் காதலிப்பது ...... இல்லை, வரிசையாகக் கூற விரும்புகிறேன். பணத்தை வைத்து, அழகைவைத்துக் காதலிப்பது என்பது இப்போதய நடைமுறையில் உள்ளதே ஆனால் இவளோ- உன்னைக்காதலிக்கிறேன் என்று நான்கூறிய இவளோ- பணத்தில், அழகில்வைத்து இத்தீர்மானத்தை இவள்மேல் நான் மேற்கொள்ளவில்லை என்பது என் மனச்சாட்சிக்குத்தவிர யாருக்கும் தெரியவோ, நம்பக்கூடியதாகவோ இருக்காது தான். ஆனாலும் உண்மை இது அழகுஎன்பது அவரவர் ரசனையை பொறுத்தது. குரங்கினை என்னால் ரசிக்கமுடிகிறது.

அவள்..... 'நல்லகறுப்பு' என்பார்களே அந்த நிறமுள்ளவள் மேல்வாய்ப் பற்கள் இரண்டு சற்றுமுன்னுக்குத் தள்ளியபடி இருக்கும். நிமிர்ந்து நடக்கும் உடல் அமைப்பு வேறு எதையும் சொல்லக்கூடியதாக எனக்கு வருவதாக இல்லை.

எனக்கு இப்போது வயது நாற்பது. இப்போது கூட என்னைச் சந்திக்கும் சில நபர்கள் 'உமக்குகல்யாணம் ஆகிவிட்டதா?' என்று கேட்பதுண்டு ஆம் அத்தனை இளமையுடன் இன்னமும் இருக்கிறேன், மிகவும் சிவந்த வெள்ளை என்போமே- நிறமுடையவன். தலைமுடியில், மீசையில் ஒரு நரையைக் காட்டுங்கள் பார்க்கலாம் என்று சவால்விடத் தயாராக இருக்கிறேன் உடல் ஊனம் சிறிதும் கிடையாது. இத்தகைய என் அழகை நான்மிகவும் புகழக் கூடாது என்பதால் நிறுத்துகிறேன். இத்தகைய நான்... அவளைத்தான்..... அவளைமட்டுமே விரும்பினேன். அவளை நான் திருமணம்செய்து, 'எங்களைச்' சோடியாகக் கோவில [illegible] இந்த வடிவானவனுக்கு இவளோ கிடைத்தாள் என்று நிச்சயம் சொல்வார்கள். அல்லது பணத்துக்காக இதைச் செய்திருப்பான் என்பார்கள். ஆனால் அவளை நான் விரும்பினேன்.

அவள் 'ஹோல்' அறையின் கதவில் சாய்ந்தபடி நின்ற சமயமே நான் என்விருப்பத்தைச் சொல்லிவிட்டேன்.

''உங்களை நான் விரும்புகிறேன்.....''

அவள் எதுவித அதிர்வும் கொள்ளவில்லை. மிகவும்சாதாரண நிலையில் அவள் நின்றாள். புன்சிரிப்புக்கூடத் தவழ்ந்தது. சிறிது நேரமௌனத்துக்குப் பின் அவள் வார்த்தைகள் தொடரும் என்று காத்திருந்ததால் ஏற்பட்டதே. சொன்னாள்- மிகவும் அவதானமாகச் சொன்னாள்- ''காதல் கொள்ளவேணும் காதலித்தவரை மணம்முடிக்கவேணும் என்பதிலெல்லாம் எனக்கு விருப்பமில்லை. அதில் நம்பிக்கையுமில்லை உங்களுக்கு விளங்கவில்லைப் போலிருக்கிறது. காதல் என்பதில் எனக்கு வெறுப்பு. நம்பிக்கையில்லை. உங்களுக்கு என்னைப்பற்றி ஓரளவுதெரிந்திருக்கும் என நம்புகிறேன்.....''

''ம்......''

'அவசரகாலச் சட்டத்தின் கீழ்' உள்ள ஒரு சிரிப்பைத் தவிர வேறு எதையும் உடனடியாக என்னால் செய்யமுடியவில்லை.

''நீங்கள் நிலை குலையக் கூடியவரல்ல உங்களுக்கு இந்த காதல் விவகாரங்களில் உள்ள நம்பிக்கை எத்தகையது என்பது பற்றி நான் அறியேன். இதுவரை இத்தலைப்பின் கீழ் விஷயங்களை நாங்கள் கதைக்காமல் இருந்துள்ளோம். என்றே நினைக்கின்றேன் ஆனபடியால்தான் உங்களுக்கு இது சம்பந்தமாக என்ன விளக்கம் இருக்கிறதோ என அறியேன்'' —அவள் சொன்னாள்.

இப்போது பௌர்ணமி தினம். அரச மரத்தின் கீழ் இருக்கிறேன். நாங்கள் எல்லா விஷயங்களையும் அலசி இருக்கிறோம் என்பது சரியல்ல. காதல் சம்பந்தமான எதுவுமே எங்களிருவரது தர்க்கங்களுக்குள்ளாகவில்லை ஒரு போதும்.

காதல் சம்பந்தமாக இவளுடன் கதைத்திருந்தால்... இப்போ இந்த நிமிடம் நடந்து முடிந்துவிட்ட அந்த முடிவு எனக்கு ஏற்படாமல் நிச்சயம் அப்போதே தவிர்த்திருக்க முடியும்.

## எமது சனகதை

''என்ன யோசிக்கிறீர்களா? அல்லது...'' என்கிறாள். ''இல்லை.. இல்லை...'' -நானும் விட்டுக்கொடுக்கக்கூடிய ஆள் இல்லை என்பதனைக் காட்டுகிறேன்,வழக்கம் போல

''காதல் என்பது என்ன? எனக்கு விளங்கவில்லை. விளக்கம் இல்லாததனால்தான் இப்படிப்பேசுகிறேனோ தெரியவில்லை உங்களிடம் எனக்கு விருப்பம் உண்டு. நிச்சயம். ஆனால் நீங்கள் கூறிய காதல் என்பதை மீறிய விருப்பம் அது. உங்கள் மேல் எனக்குள்ள விருப்பத்துக்கும், காதலுக்கும் தொடர்பில்லை. இதற்கான பொருள், நீங்கள் என் உடன் பிறப்பான சகோதரன் என்ற உறவும் அல்ல.

''தாய், தந்தை என்ற பிறப்புடன் ஒன்றிய பாசத்தை விட்டுப் புதிய ஆளுடன் சேர்ந்து பிள்ளைகளைப் பெற்று சண்டை, சச்சரவு, துன்பம். இன்பம்— இது உண்மையானது அல்ல இருந்தாலும் கொஞ்சம் தான்— ஆனாலும் இந்த நிகழ்வுகளைக் கொண்ட வாழ்வு என்பது காலாகாலமாக நடைபெற்று வருவது தானே? இந்த பலநிகழ்வுகளில் ஒன்றுதான் 'காதல்' என்பது என்று சர்வசாதாரணமாகவே நினைப்பதால் நான் அதில் பெரும் அக்கறை காட்டவில்லை. மனம் ஒப்பவில்லை. இதற்காக 'நடந்துவரும் நிகழ்வுகளில் ஒன்றுதானே உணவு உண்பதும். அதனையும் சாதாரணமாக எண்ணி அதையும் தவிர்க்கலாமே என வாதிக்க எண்ணுகிறீர்களோ? இது விதண்டாவாதம். நான் ஏற்க மாட்டேன். காரணம், நான் எதிலும் 'துன்டம், இல்லாத ,இன்பம், தரும் -உண்மையான இன்பம் தரும் -நிகழ்வுகளையே வரவேற்கிறேன் விரும்புகிறேன். 'காதல்' நிரந்தர இன்பம் உள்ளதொன்று என்று நான் நம்பவில்லை நிச்சயம் நம்பவில்லை. இதனைச் சொல்வதற்காக எனக்கு ஏதோ விரக்தி ஏற்பட்டுள்ளது என்று நீங்கள்பட்டம் கட்டப்போவதையும்அனுமதிக்கப் போவதில்லை. நிச்சயம் எனக்குக் காதல் சம்பந்தமாக முன்னால் எதுவிததோல்வியும் ஏற்பட்டதில்லை விரக்தி ஏற்பட, நீங்கள் நம்பலாம்''

எனது பதிலை எதிர்பார்த்திருப்பவள் போல நின்றிருந்த அவள் கதிரையில் வந்து அமர்கிறாள். வீட்டு முற்றத்தில் நின்றிருந்த எனது சைக்கிளில் வெய்யில் விழுந்திருக்கிறது. பழைய சைக்கிள்தான். ஆனாலும் எழுந்து சென்று வேலியோரமாக இருந்த நிழலில் விட்டு விட்டுப்பின் 'ரயரை'க் காற்றுப் போய் விட்டதா? எனத்தொட்டுப் பார்த்த பின் வந்து அமர்கிறேன். தாகம் ஏற்படாமலிருந்தாலும் சிலவேளையில் சிலர் தண்ணீர் அருந்துவதுண்டல்லவா?

''காற்றுப் போய் விட்டதா?'' என்று கேட்டு மீண்டும் அவளாகவே சிரிப்புடன் பேச்சைத் தொடர்கிறாள்... ''இப்போ பாருங்கள்... நாங்கள் இருவரும் காதலர்கள் என்று வைத்துக் கொண்டால் நாம் அடிக்கடி சந்திப்போம்: கதைப்போம்; கதை முடியாது. முடியாமல் மீண்டும் மீண்டும் சந்தித்துக் கதைப்போம் பின்பு படத்துக்கு' பூங்காவுக்கு செல்வோம், அடிக்கடி நீங்கள் எனக்கு 'ரொபி' 'பிஸ்கட்' இப்படி சிறந்த தின்பண்டங்களைக் கூட வாங்கி வந்து தருவீர்கள். உங்களுக்குச் சீனி போட்டுத் தேனீர் தருவேன் நான் உங்கள் சம்பள நாளில் இன்னும் வேறு யாரிடமேனும் பொய் சொல்லி மேலும் காசு கடன்பட்டு மிகச் சிறந்த 'சாறி' கூட வாங்கித் தருவீர்கள் இப்படி நடந்துகொண்டிருக்கும் சில, அல்லது நீண்ட நாட்களின் பின் எனது வீட்டுக்கு வந்து போகும் எனது இரத்த உறவு மச்சான்மாருடன் கதைக்க வேண்டாம் என்பீர்கள். உங்களைப் பொறுத்தமட்டில் இப்படி நீங்கள் சொல்லமாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும் கூட சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சொல்லியே விடுவீர்கள். எனக்கு அதனால்முதலாவதுமனச்சலிப்பு ஏற்படும். இச்சலிப்பு அறுந்து போகாமல் மேலும்

(12ம் பக்கம் பார்க்க)

## இருளுக்குள் ஒரு சூரியனைத் தேடி

செக்கர் இருட்டின் சிவப்பு மூக்குத்தி
சிறுசிறு குப்பி விளக்குகள்!
இருள் தூவிய பாதையில் அவன்
சகதி அப்பிய காலுடன் வருவான்!

''எங்கே சூரியன் இப்போ காட்டுவாய்''
என்று மனமோ அடாத்துப் பண்ணும்.

பொறு! பொறு! காலை வரும்
அந்தக் கதிர்களின் செவ்விளந்
தளிர்களைக் காட்டுவேன்! என்றேன்.
மனமோ விட்டபாடில்லை
அங்கும் இங்கும் விடாப்பிடியாகச்
சகடை விட்டது.

இருட்டோ முன்னிருட்டு
சம்பிரதாயம், வறுமை சடங்குகள்
மட்டுமல்ல,
அங்கிரமங்களும் இருளுக்கடியிற்
கலம்பக மாடின

''எங்கே சூரியன்'' -
இன்னமும் மனசு ஓயவில்லை!
ஒருகணம் சாய்ந்து படுத்தாற்
கனவுச் சோலையிற் சூரியன் காணலாம்
என்று நான் எழுப்பிய சமாதானம்
அசட்டுச் சிரிப்பில் அதிர்ந்துபோனது!

அந்த இருள் -
நீதியின் கழுத்தை நசுக்கும் இருள்!
அதன் அடியில் -
மானுடம் என்பது புழுவாய்த் துடிக்கும்!
பளிங்கு மீது சறுக்க முடியாக்
கனவுகள் சுமக்கும் மனம்!
மேலும் மேலும் குவியல் குவியலாய்
மண்ணும் வழியும் மரங்களும்
இருளைக் கொட்டின.

மனமே! நீ ஒளியைக் கேட்பது
சிறுபிள்ளைத் தனமே அல்ல!
வா வா தேடுவோம் -
விடியும் வரையும் நித்திரை வேண்டாம்!

- சபா ஜெயராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும். வீட்டில் புத்திரர் மகிழ்ச்சி அடைவர். குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். புதிய நம்பிக்கை உதயமாகும். முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும் உஷாராக இருக்கவும். உற்சாகமான வாரம்.

## ரிஷபம்

எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் தென்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். சோர்வுக்கு இடம் கொடேல். சிறிய விஷபயத்திற்கும் இடமுண்டு. கண்டிப்பான வாரம்.

## மிதுனம்

சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை நன்மை தரும். அவசரக்கோலம் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வீணான சிந்தனைகளினால் சோர்வுநிலை தென்படும். நம்பிக்கையான வாரம்

## கடகம்

மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு. அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். மனம்போல் யாவும் நடக்கும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். கலவியில் சிறப்பும் உறவினர்களின் கொண்டாட்டமும் கிடைக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

## சிம்மம்

இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். நேர்முகப் பரீட்சைக்கு உகந்த வாரம். புத்திரசுகத்துடன் இனசனக் கொண்டாட்டமும் உண்டு. தொழில்துறையில் வெற்றி கிடைக்கும். தெய்வத்தின் அருள் தாராளமாகக் உண்டு. சுமாரான வாரம்.

## கன்னி

பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகளுண்டு. நம்பிக்கை மோசடிமூலம் பணமும் பறிபோகலாம். முன் எச்சரிக்கை நன்று. ஆயுத பீடைக்கும் இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும் அமைதியான வாரம்

## துலாம்

இல்லறத்தில் இனிமை தவழும். வெளியிடத் தொடர்புகள் பெருகும். கற்கண்டு போல் இனிக்கும் வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. களஸ்திரவழி மூலம் கனதனம் சேரக்கூடும். இனசனங்களின் உதவியுமுண்டு. செல்வாக்கும் உயரும்.

## விருச்சிகம்

நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம். பொருட்செலவுமுண்டு.

## தனுசு

தெளிந்தமனம். தெய்வ. குருபதிக்யுடன் தேடியது கிடைக்கும். பரோபகாரச் சிந்தை வளரும். பொதுப் பணியை நாடுவீர். பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள். இதன்மூலம் பணமும் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். பெரியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும்.

## மகரம்

வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும். வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும். வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். சுபவாரம்.

## கும்பம்

நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும். பிணி அகலும் உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர். சிறப்புமுண்டு. எதிர்பார்த்த செய்தி இவ்வாரம் கிடைக்கும். பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணப்படும். வசதிகள் பெருகும்.

## மீனம்

பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று. சிந்தனையில் குழப்பநிலை உருவாகும். விவசாயத் துறைமூலம் நஷ்டம் ஏற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

திருமலை வே. ரவீந்திரன்

# உயிர்த்த ஞாயிறுதரும் உத்தானச் செய்தி



கிறீஸ்து முப்பது ஆண்டுகளாக மறைந்து வாழ்ந்தார் இம்முப்பது ஆண்டுகளாக மூன்றாண்டு சேவை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தார் மூன்றாண்டுகளாக அவர் சொந்த ஊரிலும் அண்டை அயலிலும் நற்செய்தியைப் போதித்தார்- புதுமைகள் பல புரிந்தார்- தவறான போக்குகளைக்கண்டித்தார்-உண்மையை எடுத்தியம்பினார்.

முப்பத்து மூன்றாவது ஆண்டின் இறுதிவாரம் -வியாழக்கிழமை இரவு-கிறீஸ்து தன் பன்னிரு சீடர்களுடன் விருந்துண்டார். அன்புமொழி பேசி அன்புக் சின்னமாம் நற்கருணையை உருவாக்கி-அன்புப் பணி தொடரக் குருத்துவம் நிறுவி, தனிமையில் செபித்துத் திருவிழிப்பிருந்தார். மறுநாள் வெள்ளி தலைமைக் குருக்கள் கைப்பாஸ்பிலாத்து முன்னிலையில் குற்றவாளியாக்கப்பட்டு' கொலைத் தீர்வைப் பெற்றார். தீர்ப்பளிக்க வேண்டியவரே தீர்வைக்குள்ளானார்.

'அவனை நம்பினோம்- ஆனால் அவன் எங்கள் காலை வாரி விட்டானே! எந்த முகத்தோடு மக்கள் முன் நிற்பது? மக்கள்

## வாழும்பொழுது தலைசாய்க்க இடம்கிடைக்காத கிறீஸ்துவுக்கு செத்தபின்னும் வளர்த்த இடம் கிடைக்கவில்லை

கல்வாரியில் உயிர் துறந்த கிறீஸ்துவை யாரோ தமக்கெனச் செதுக்கிய கல்லறையில் அடக்கம் செய்தார்கள். வாழும்பொழுது தலைசாய்க்க இடமின்றி வாழ்ந்தவர். செத்தபின் உடல் வளர்த்த இடமின்றி இருந்தமையில் வியப்பேதுமில்லை! கல்லறை வாயில் மூடப்பட்டது. சீடர்கள் மனங்களும் மூடப்பட்டன. உயிர்ழந்தவரைக் கல்லறைக்குள் வைத்தனர். சீடர்கள் உயிருடன் கல்லாகச் சமைந்தனர்!

கேட்கும் வினாக்களுக்கு விடை என்ன பகர்வது! நாம் இனி என்ன செய்வது? எமது நம்பிக்கை என்ன ஆவது?- சீடர்களின் மனங்கள் தத்தளித்தன. அனைவரும் அறையொன்றில் ஒதுங்கினர். கூனிக் குறுகி ஒடுங்கினர். ஆயினும், கிறீஸ்து அவர்களை அப்படிப் பரிதவிக்க விடவில்லை. விளக்கம்—வரலாறு பேசுகிறது (புனித லூக் 24:1- 2)

கிறீஸ்து சிலுவை சுமந்து செல்வதும், கல்வாரி மலையில் உயிர் நீப்பதுமே கிறீஸ்துவின் வாழ்க்கையில் உச்சக்கட்டம். அவர் உயிர்த்தெழுந்தமை உச்சத்தில் உச்சம். உயிர்த்த கிறீஸ்த்து, விசுவாசிப்போர் அனைவர் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். கிறீஸ்துவின் இந்த உச்சங்களுக்கு அவர் படிப்படியாகத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டார் மூன்றுவருட சமூகவாழ்கைக்கு முப்பது வருடஆயத்தம் செய்தார். இறுதியில் பட்டதுன்ப துயரங்களுக்கும், அவமானத்துக்கும், கொலைக்கும் அம்மூன்று வருடவாழ்க்கை பயிற்சித்தளமாக அமைந்ததை அவரது வாழ்க்கை எடுத்துரைக்கின்றது

**கரம்பொன் றமேஷ் வேதநாயகம்**

நாம் அயலவருக்கு உதவி செய்யவும், அவர்களோடு எமது வாழ்க்கையை பகிர்ந்து அவர்களை வாழவைக்கவும் மேண்டுமென்றே கிறீஸ்து இன்றும் வாழ்கிறார். அயலவருக்காக வாழ்வதுஅவ்வளவு சுலபமானதல்ல. அதற்கு நாம் எம்மைப் பயிற்றவேண்டும். மற்றவர்களுக்காக முழுமையாக வாழ்வதன் மூலம் கிறீஸ்துவுக்கு எம்மை முழுமையாக அர்ப்பணிப்பதற்கு நாம் நாள்தோறும் ஆயத்தம் செய்யவேண்டும். சின்ன விடயங்களில் கொடுக்கத் தெரிந்தவர்கள்தான் இறுதியில் முழுமையாகக் கொடுப்பார்கள். பலவீனமுடைய மனிதசுபாவத்தைக் கொண்ட நாம் கொடுத்து வாழும் வாழ்க்கையில் உயரவேண்டும். இவ்வுயிர்ப்பு ஞாயிறு உயிர்த்தல் கிறிஸ்துவழிநின்று எமக்குச் சொல்லும் உத்தானச் செய்தி இதுவன்றோ!

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199

T. C. C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம்:- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொடர் நவீனம்

**10**

சோமர் சொல்லிவிட்டார்; பண்டாரி அமுல்நடத்திவிட்டான்.

பண்டாரக்குளத்தடிக்கு அப்பச்சட்டி கந்தையாவின் குதிரைவண்டியைக் கொண்டு சென்று மாமன் பொன்னன் மகள் முத்தியைப் பண்டாரி சிறைப்பிடித்து வந்து சோமர் முன் ஆஜராகிவிட்டான்.

எட்டுப்பத்து நாட்களாக பண்டாரியைப்பிடித்து விடுவதற்குப் பொன்னன் தன்னல் ஆன சரணமெல்லாம் அடித்துப்பார்த்து விட்டான். சோமரின் பரந்துபட்ட செல்வாக்கின்முன் பொன்னனுவது, அவனின் சரணமாவது! கடைசியாக ஒருநாள் முத்தியையும் பண்டாரியையும் தலைமைக்காரன் வீட்டுக்குக் கொண்டு சென்று இருவரிடமும் ஒப்புதல் வாக்குமூலத்தைச் சொல்லவைத்து விட்டு, வில்லூண்டிப் பிள்ளையார் கோவிலுக்குச் சற்றுஅப்பால் இருந்த தனது தென்னந்தோப்புக்குள் அவனைக் குடியுங் குடித்தனமுமாகக் குந்தவைத்து விட்டார் சோமசுந்தரத்தார்.

இந்த களேபரங்களுக்குள்ளும் பண்டாரியின் எண்ணமெல்லாம் சோமசுந்தரத்தாரின் திருமணக்காரியத்தில் தான்.

மூங்கிலடி மணியகாரன் வைரமுத்தரைச் அருட்டி விட்டுவிட்டுச் சோமசுந்தரத்தார் வந்துவிட்டதன் பின்பு— பண்டாரியின் காரியங்களும் முடிந்துவிட்ட பின்பு— வயிரமுத்தர் சோமரைத் தேடிவந்தார்.

அந்த நல்லெண்ணைக் கறுப்பியின் தந்தையான காசிப்பிள்ளை முதலிக்கு. சோமருக்கு பெண் கொடுப்பதில் துளிகூட விருப்பமில்லை என்பதைக்கூறி, தான் முடிந்தவரை தன் செல்வாக்கைப் பயன்படுத்திப் பார்த்துத் தோல்வி கண்டுவிட்டதாகவும் சொல்லி, அந்தச் சம்மந்தத்தை விட்டுவிடச்சொல்லியும் வற்புறுத்தினர் வயிரமுத்தர்.

''இஞ்சேரும் வயிரமுத்தர், இந்த சோமன் ஒண்டிலை ஆசை வைக்க மாட்டான், அப்படி ஆசைவைச்சிட்டான் எண்டால் தலைபோனலுஞ் செய்யாமல் விடமாட்டான்! நீர்இருந்து பாரும். சோமன் அந்தவீட்டிலை கட்டிகிருனே இல்லையோ எண்டு''

இப்படிச் சபதமெடுக்கும் தோரணையில் சோமர் வயிரமுத்தரிடம் பேசிவிட்டார்.

இதன் பின்பு இந்தக் காரியமாகச் சோமர் பண்டாரியுடன்தான் முதலில் பேசினர்.

பெண்ணைத் தூக்கி வருவதற்காகப் பண்டாரி ஒற்றைக் காலில் நின்றன்.

சமீபத்தில்தான் அவன் ஒரு வீர சூரத்தனம் செய்திருக்கிறன்— முத்தியைக் கொண்டு வந்திருக்கிறன் அதைவிடவும் முத்தியைப் போல, பண்டாரியைக் கண்டு சிங்கம் போல நிற்கும் நிலையில் காசிப்பிள்ளை முதலியின் நல்லெண்ணைக் கறுப்பி இருக்கவில்லை அவள் தன்னில் மனப்பட்டிருப்பதாகத்தான் சோமர் சொல்லியிருக்கிருர். இதனல் தன் காரியத்தையும் விட இது மிகவும் சுலபமான வேலை என்பது தான் பண்டாரியின் எண்ணம்

அப்போதுதான் சில்லாலை முருகேசு 'போட்' கார் ஒன்றை எடுத்து வைத்திருந்தான்:

இதுதான் யாழ்ப்பாணத்திற்கு எட்டாவது கார்.

இதைப்பிடித்து இதிலேயே பெண்ணைத் தூக்கி வந்துவிட வேண்டும் என்பது பண்டாரியின் யோசனை.

இந்த யோசனையைச்சோமர் ஏற்கவில்லை. ''காரைக்காணுத ஊருக்குக் கார்போனல் ஜனம் காரைப்பார்க்கக் கூடிவிடும்; போகும் வேலைக்கு இது இடைஞ்சலாகிவிடும்'' என்பதுதான் சோமரின் அபிப்பிராயம்.

கடைசியில் அப்பச்சட்டியின் குதிரைவண்டியும், கறுத்தார் வீட்டுக்குதிரை வண்டியும் தான் இதற்கு உகந்தது என்று முடிவாயிற்று.

நாளும் குறிப்பிடப்பட்டுவிட்டது.

ஒவ்வொரு வெள்ளியும் காசிப்பிள்ளைமுதலியும் மனைவியும் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்குப்போவது வழக்கம் என்பதைச் சோமர்முன் கூட்டியே தெரிந்துவைத்துக் கொண்டிருந்ததால், அந்த நாளையும், அந்தமைம்மல் பொழுதையுமே தெரிவுசெய்துவிட்டார்.

வண்டி ஓட்டிகளைவிட மொத்தமாகப் பத்துப்பேர். அதில் சோமரும் பண்டாரியும் அடக்கம்!

முக்கந்தர்கள் மூவர். சோமரின் வெளியூர் கைக்காய்கள் மூவர். பண்டாரியால் தெரிவு செய்து கொண்டு வரப்பட்டவர்கள் இருவர். சோமரையும் பண்டாரியையும் சேர்த்து மொத்தம் பத்துப்பேர்.

ஐந்து ஐந்தரைமணிக்கெல்லாம் வண்டிகள் ஆனைக்கோட்டை மூத்தநயினர் கோவில் குளத்தடிச்சந்திப்பால் திரும்பிவிட்டன.

வண்டி செல்லமுத்து வெட்டையடிக்குவர மைம்மல் பொழுது வந்துவிட்டது.

வண்டிகள் வேலக்கைப்பிள்ளையார் கோவிலுக்குத் தெற்கால் உள்ள மகிழ மரக்கூடலில் நுழைய இருட்டிவிட்டது.

ஆளை ஆள் தெரியாத இருட்டு

ஏற்கெனவே குதிரைகளின் நாதச்சதங்கைகள் நீக்கப்பட்டிருந்ததால் எந்தவிதப்பெரு ஆரவாரமும் இல்லை.

வண்டியில் இருந்துஇறங்கிய பண்டாரி வெளிக்கதவண்டை மெதுவாகச் சென்றன்.

வெளிக்கதவு சங்கிலியோடுப் பூட்டப்பட்டிருந்தது

பண்டாரி எட்டிப்பார்த்தான்.

உள்ளே இருள்தான் தெரிந்தது

காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஆள் அரவம் ஏதாதது கேட்கிறதா என்பதை அநுமானித்தான்.

பேச்சு மூச்சு ஒன்றுமில்லை.

சற்றுவேளை அப்படியே நின்றன்

எங்கும் சூனியம்!

பண்டாரி வண்டிலடிக்கு அடிமேல் அடிவைத்துத் திரும்பி வந்து ''உள்ளுக்கு ஒருதரும் இல்லை போலை கிடக்கு, கதவுச் சங்கிலியும் பூட்டிக்கிடக்கு!'' என்றுசோமரின் காதுக்குள் கூறினன்.

சோமர் ஒன்றுமே பேசவில்லை.

வந்தகாரியம் சித்திக்காது போலக் காணவே அவருக்கு வாய் அடைத்துவிட்டது!

'அப்ப என்ன செய்யிறது? போவமோ நிப்போமோ?- வண்டிக்குள் இருந்து ஒரு இரகசியக்குரல் கேட்டது.

சோமருக்கு இதற்கும் பதில் கூற வரவில்லை.

'பெட்டையளையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குக் கீயிலுக்குப் போயிருப்பினம், பொறுத்துப் பாப்பம்!' - பண்டாரிதான் பதில் சொன்னன்.

சற்றுத் தொலைவில் யாரோ வருவது போன்ற அசுகை தெரிந்தது

'ஆரோ வாருங்கள் போலை கிடக்கு!'

முன்னே நின்ற மறுவண்டிக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது

'எணை அப்பு அதிலை ரெண்டு குதிரை வண்டிகள் நிக்குமாப் போலை கிடக்கெணை!'

இப்படி ஒரு குரல் வந்தது.

'எடை அது, முதலியாரெட்டை ஆரோ வந்திருக்கினம் போலை கிடக்கு! வீட்டிலை அவை இல்லையாக்கும் அது தான் நிக்கினமாக்கும்!'

இப்படி வேறோர் குரல்.

இரண்டு மாடுகளின் குளம்படிக்கும் ஓசை-

இரண்டு காளை மாடுகள் முன்னே செல்ல, ஏர் கலப்பையைத் தோளில் சுமந்து கொண்டு பின்னே வர, அவனுக்குப் பின்னல் சிறுபொடியன் ஒருவன் செல்கிறன்.

'எட யாரோ உழுதுபோட்டு வயலாலை போருங்கள். என்று பண்டாரி கீழ்க்குரலில் சொன்னன்

பிள்ளையார் கோயிலின் உள்ளே ஏற்றிவைக்கப்பட்டிருந்த விளக்கின் ஒளிக்கீற்று ன்று நீளமாக வெளியே தெரிந்து கொண்டிருந்தது

வானத்திலே வக்காப் பறவைகள் குரல்வைத்துப் பறந்து சென்றன.

எங்கோ தொலைவில் ஆட்காட்டிக்குருவிகள் குரல்வைத்துச் சென்று கொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது.

களங்கமற்றுக்கிடந்தவானத்தில் வெள்ளித்துகள்கள் அடிவானம்வரை சிதறிக்கிடந்தது.

சற்றுத் தொலைவில் காளை மாடுகளின் சதங்கை நாதம் எழுந்தது!

'பண்டாரி கோயிலாலை வண்டில் வருகுதுபோலை கிடக்கடா; உதிலைதான்ரா ஆக்கள் வருகினம்!'

சோமர் மெதுவாகக் கூறினர்.

சற்றுவேளைக்குள் எல்லோருமே நிலத்தில் குதித்துத் தயாராகிவிட்டனர்.

இரட்டை வில்லுவண்டி வெளிக் கதவடிக்கு வந்துவிட்டபோது, ஒரு உருவம் வண்டியிலிருந்து இறங்கிச் சங்கிலிப்பூட்டைத் திறந்தது.

அது காசிப்பிள்ளை முதலியாகத்தான் இருக்க வேண்டும்!

நான்கைந்துபேர் தாவி ஓடினர்.

அவர்கள் ஓடிச்சென்ற அதிர்ச்சியைக் காசிப்பிள்ளையர் அவதானிப்பதற்கிடையில் ஓடிச்சென்றவர்கள் அவரை இறுகச் சுற்றிப்பிடித்து அவர் மோவாய்க் கட்டையைத் துணியினல் அமுக்கிவிட்டனர்.

வண்டிச்சாரதி படபடத்துப் போனன்.

சோமரும் பண்டாரியும் வில்லுவண்டிக்குள் தாவி ஏறினர்

'ஐயோ என்ரை பிள்ளையள்!' - இப்படியொரு பெண்குரல் கீச்சிட்டு எழுந்தது.

'ஐயோ அம்மா, ஐயோ என்ரை ஐயோ!' - இது இரு பெண்களின் அவலக்கூக்குரல்கள்!

அப்புறம்......

அப்புறம். ...

கணவேளைக்குள் இருகுதிரை வண்டிகளும் மின்னலாகப் பறந்துவிட்டன.

தாயும் ஒரு மகளும் கத்தியதுதான் கேட்டது.

அடுத்த மகளின் குரல் ஓடிச் சென்ற குதிரைவண்டிக்குள் இருந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

சோமருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

பண்டாரி பெருமிதத்தோடு அப்பச்சட்டியருக்குச் சோடியாக ஆசனததில் தாவிஏறி அப்பச்சட்டியரின் சவுக்கைப் பறித்துக் குதிரைகளுக்கு மாறி மாறிச் சாற்றினன்

சற்றுவேளைக்குப்பின் பெண்ணின் கூக்குரல் எதுவும் கேட்கவில்லை!

அவள் மயங்கி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சோமரை அறிந்துவிட்டுச் சமாதானப்பட்டிருக்க வேண்டும்

மூத்தநயினர் கோவிலடிக் குளத்தைத் தாண்டி, ஆனைக்கோட்டைச் சந்திப்பைத் தாண்டி, காக்கைதீவுத்துறை முகத்தைத்தாண்டி, நாவாந்

(12ம் பக்கம் பார்க்க)

## வேறுபாடுகள்!

எங்கள்
வயிறுகளை
நிரப்புவதற்காகவே
நாங்கள்
மரங்களிலே ஏறுகிறேம்.
எங்களின்
கள்ளை
குடிப்போரில் பெரும்
பாலோர்
ஏனே எம்மில்
உயர்ந்த குடிகளாம்.
இரவு வேளையில்
அவர்களில் பலர்
எங்கள் பனைகளில்
சீவல் தொழிலை
பார்ப்பதுமுண்டு
ஆனலும் என்ன
அவர்கள்
ஏனே எம்மில்
உயர்ந்த குடிகளாம்.

○

மச்சம்
கறியில்
மணக்காதுவிட்டால்
அவர்களால் சோறு
உண்ண முடியாது.
அவர்கள் சாப்பிட
வேண்டுமே
என்பதற்காகவே
நாங்கள்
கடலுக்குச் செல்கிறேம்.
எங்கள்
வயிறு என்றுமே
நிரம்பியதில்லை.
அவர்களிற் சிலர்
தீப்பந்தங்களுடன்
கடலுக்கு வருவதை
நாம்
பார்ப்பதுமுண்டு
ஆனலும் என்ன
ஏனே எம்மில்
உயர்ந்த குடிகளாம்

○

வீட்டுக்கொருவர்
ஜெர்மன் பிரான்ஸில்,
அகதிகளாயினர்.
அவர்கள் கொடுக்கும்
'பிச்சைக்காசில்'
ஜீவிக்கின்ற
அந்த இளைஞர்கள்
தலைமுடி வளர்ந்தால்
தாமே வெட்ட
நன்ருய் இப்போ
பழகிவிட்டனர்
இருபது மார்க்கு நாற்பது
பிராங்கு
என்று கொடுக்காது
சிக்கனமாக
ஜீவிக்கும் அவர்கள்
மிச்சப்படுத்தி
அனுப்பும் பணத்தில்
வாழும நம்மவர்-
எமது வயிற்றை
நிரப்புதற்காக
முடியினை வெட்டும்
தொழிலைப் புரியும்
எம்மில் ஏனே
உயர்ந்த குடிகளாம்

○

டாக்டருக்கும்
நர்சுக்கும்
வித்தியாசம்
ஆசுப்பத்திரி உள்ளேதான்.
வீதியில் இறங்கிவிட்டால்
இருவரும் ஓர்குடிகள்
அவர்களிடையே
தொழிலின் வேறுபாடு
தொழிலகத்தில்
மட்டுந்தான்
ஆனல்
எங்கள் விடயத்தில்
வீதியிலும் வேறுபாடு


○

தேர்தல் காலத்தில்
மட்டும் எங்களுடன்
உறவாடும்
கூட்டத்தை நாம்
அடையாளம்
கண்டுவிட்டோம்
விரைவில் நம்மண்ணில்
புரட்சி
வெடிக்கத்தான் போகிறது
அப்போது-
நாம் உயராவிட்டாலும்
அவர்கள்
கீழ்இறங்கி
வரத்தான் போகிருர்கள்.

- ரஜனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகவி தண்டி என்பவர் வடமொழிக் கதாசிரியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர். இவர் எழுதிய தசகுமாரசரிதம் என்னும் வடமொழி நூல் உலகப்பிரசித்தி பெற்றது. அதிலே உள்ள கிளைக்கதைகளுள் ஒன்று காமமஞ்சரி என்னும் கணிகை மாதின் கதையாகும். இக்கதை மிகவும் புதுமையானது. இக்கதையின் ஓர் அம்சத்தையடிப்படையாகக் கொண்டு இச்சிறு கவிதை நாடகம் படைக்கப்பட்டுள்ளது. மனித பலமும் பலவீனமும் சித்தரிக்கப்படும் இந்நாடகமூலம் வஞ்சனையின் வெற்றி மனித சமுதாயத்துக்கு ஓர் போதனையாகவே அமைகின்றது என்ற உண்மை போதிக்கப்படுகிறது.




கவிதை நாடகம்

காட்சி — 2

இடம் : ஆச்சிரமம்

பாத்திரங்கள் : முனிவர்

காமமஞ்சரி

(பொழுது புலரும் நேரம். புள்ளினங்கள் சத்தமிடுகின்றன. காலை நேரத்திற்குரிய இசை ஒலிக்கின்றது.)

காம

கீர்த்தி மிக்கோய்
ஆன்றோர் ஒருமுறை ஆற்றிய அறம்பின்
மீண்டெக் காலமும் அழியா தென்றால்
அறவழி நின்ற அறிஞர்கள் பின்னல்
குறைசில புரிந்து நிறைதளர்ந் தாலும்
அறத்தினை யிழைப்பரோ? அறிய
விழைகிறேன்

முனி

அறம்செய் தோரும் அநீதிகள் புரிந்தால்
தண்டனை கிடைப்பது சகசம்தானே!

காம:

இல்லை சுவாமி, இது பெருந் தவறு

முனி:

பெண்ணே! என்ன பிதற்று கின்றாய்

காம :

பிதற்றல் அல்ல, பெரும் பே ருண்மை

முனி :

உண்மையா?

காம

ஆமாம் உரைக்கின்றேன் கேண்மின்
அகலிகை மீது ஆசைப்பட்ட
இந்திரன் அறத்தை இழந்தது முண்டோ?
திலோத்தமை மீது சிந்தை யிழந்த
பிரமாவின் பெருமை பிசகிய துண்டா
பெரியோர் செய்த பெரும்பிழை யெல்லாம்
அறத்தின் வலிமையால் அழிந்தே போயின

முனி :

(சிரிக்கிறார்)
தவறாய் இந்தச் சரித்திர மெல்லாம்
புரிந்து கொண்டாய் புத்தியே இல்லாய்
இந்திரன் முதலியோர் இதற்காக உற்ற
தண்டனை களைநீ மறந்தே விட்டாய்

காம :

மறந்திட வில்லை மாபெருந் தவத்தோய்!
தண்டனை பெற்றனர், ஆயினும் அவற்றை
கொண்ட தம் அறத்தால் வென்றிட
வில்லையா
இந்திரன் இன்றும் இந்திரனேதான்
பிரமா இன்றும் பிரமா வேதான்

முனி :

(சிரிக்கிறார்)

காம :

பெண்கள் மீது பிரியம் வைத்த
விண்ணோ ரெல்லாம் தாம் முன்பு செய்த
அறத்தின் வலிமையால் அசையவே யில்லை
இப்பொழு தாயினும் என்தன் கருத்தை
ஒப்புகின் றீர்களோ உயர்தவச் செல்வ

முனி :

உண்மைதான் மஞ்சரி உண்மைதான்
இந்த
உண்மையை இன்றுதான் உணர்கின்றேன்
யான்

காம :

இதுவரை காலமும் இயற்றிய உங்கள்
தவத்தின் வலிமையோ சாற்றுதற் கரிது

முனி :

எதற்காக இதனை இப்போ சொல்கிறாய்

காம :

இந்திரன் பிரமா இவர்களைப் போல
அறநெறி பூண்ட அருந்தவ ஞானி
நீங்கள் என்பதை நினைவு படுத்துறேன்

முனி :

அப்படியென்றால் ...

காம :

... அவர்களைப் போல
தப்புகள் செய்யினும் தருமம் அழியாது

முனி :

மஞ்சரி ...

காம :

... ஆமாம் சுவாமி நீங்களோ
தேவரை யொத்த திண்மை பொருந்தப்
பெற்றவர் என்பதை யாவரும் அறிவர்

முனி :

மஞ்சரி ...

காம :

... சுவாமி ...

முனி :

... மயக்கமாய் இருக்குதே

காம :

என்தன் கருத்தா, அல்லது ...

முனி :

... இல்லை
உன்தன் வார்த்தையில் ஏதோ வசீகரம்
உள்ளதை யானும் உணர்கிறேன் மஞ்சரி
கல்லினை யொத்த கடிய நெஞ்சையும்
கனியச் செய்திடும் காந்த மிருக்குது
இனியவளே ...

காம :

சொல்லுங்கள் சுவாமி ...

முனி :

கண்ணே!
இத்தனை காலமும் பித்தனைப் போல
இத்தரை மீது இருந்தமை பேதமை
(பெருமூச்சு விடுகிறார்)
பத்தரை மாற்றுப் பசும் பொற் பாவாய்
சித்தம் கவர்ந்த தேவா மிர்தே!

காம :

முனிபுங்கவ ... என்னை விடுங்கள் ... யாரும்
பார்த்திடப் போகிறார் ... பயமாய் இருக்குது

முனி :

அஞ்சுகமே நீ அஞ்சிட வேண்டாம்

காம :

சுவாமி ...

முனி :

... கண்ணே ...

காம :

ம்ம்ம் ...

முனி :

மஞ்சரி,
பிறந்த பயனைத் துறப்பவன் பேதை
பெண்கள் நலனைத் துய்ப்பவன் மேதை.

— திரை —




லண்டன்மடல் : "உதயதாரகை"

அமெரிக்கா- நியூயோர்க்கில் நனுவற் நகரில் உள்ள 'ஹொலிடே இன்' ஹோட்டலில் எதிர் வரும் ஜூன் மாதத்தில் தமிழ்த் தென்றல் (ஒரு வேளை சூறாவளி ஆக மாறலாம்) வீசப்போகிறது.

அமெரிக்காவிலும் கனடாவிலும் உள்ள தமிழர்கள் ஒன்று சேர்ந்து சர்வதேசத் தமிழ் மாநாடு ஒன்று நடத்தப் போகிறார்கள். ஜூன் மாதம் 29ம் திகதி முதல் ஜூலை 2ம் திகதி வரை தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு இந்த மாநாடு நடைபெறும்.

## அமெரிக்காவில் அனைத்துலக

## தமிழ் மாநாடு - ஜூனில்

இந்த மாநாட்டின் குறிக்கோளாக நான்கு அம்சங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- உலகத் தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியத்தை மேலோங்கச் செய்தல்.
- உலகு தழுவிய ரீதியில் வாழும் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற பல்வேறு விஷயங்களைப் பற்றி ஆராய்தல்.
- நியூயோர்க் நகரில் சர்வதேச தமிழ் நிலையம் ஒன்றை உருவாக்குவதற்காகத் தமிழ்ச் சமூகத்தினரின் உள்ளும் புறமும் உள்ள பல்துறை விற்பன்னர்களை ஒருங்கிணைத்தல்.
- ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் மனித உரிமை அத்துமீறல்களை ஆராய்தல்.

வது தகவல் உண்டா என அறிய ஒருநாள் இரவு ஒன்பது மணி போல 'தமிழர் தகவல் நிலையத்'துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

தொலைபேசியில் ஒரு பெண் குரல் ஆங்கிலத்தில் வந்தது; ''இது ஒரு ஒலிப்பதிவு நீங்கள் கோரும் தகவலை இந்த நேரத்தில் தர முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறோம். எனினும் நீங்கள் கோரும் தகவல் யாது என்று கூறினால், நாளைக் காலை ஆவன செய்யத் தயாராக இருக்கிறோம். நான்பேசி முடிந்ததும் உங்கள் தகவலைச் சுருக்கமாகக் கூறுங்கள்''

அமெரிக்க மாநாடு பற்றிய தகவல் இருந்தால் அனுப்பிவைக்கவும் என்று சொல்லி, பெயரையும் முகவரியையும் அந்தத் தொலைபேசியின் தன்னியக்க ஒலிப்பதிவிற்கு கூறி வைத்தேன்.

மூன்றும் நாள்; அமெரிக்க மாநாடு பற்றிய நிகழ்ச்சி நிரல் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவம் அடங்கிய அமெரிக்க மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் வெளியிடப்பட்ட பிரசுரம் -இலண்டன் 'தமிழர் தகவல் நிலையத்திலிருந்து எனக்குத் தபாலில் வந்தது!

இலண்டன் 'தமிழர் தகவல நிலையம்' எவ்வளவு சிறந்த சிரிய பணி ஆற்றி வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

மாட்டின் லூதர் கிங், பெஞ்சமின் பிராங்லின், டுவைற் ஐஸன்ஹோவர், எட்மன்ட்பேர்க்' ஜோன் கென்னடி ஆகிய அமெரிக்கத் தலைவர்களின் பொன் மொழிகளும், புறநானூறில் இருந்து ஒரு கவிதையும் மாநாட்டுப் பிரசுரத்தில் இடம்பெறுகின்றன.




இந்த அம்சங்களைப் பற்றி ஆய்வுரைகள் பட்டி மன்றம், கேள்வி-பதில் நிகழ்ச்சிகளும், அதைவிட சிறுவர் நிகழ்ச்சி, நாடக- நடன நிகழ்ச்சிகள் போன்ற இதர அம்சங்களும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் செயலர் ஆக டாக்டர் வின்சன்ட் பஞ்சாட்சரம் இயங்கி வருகிறார்.

அமெரிக்க மகாநாட்டைப் பற்றிய இந்த விபரங்கள் 'உதயதாரகைக்கு கிடைத்த முறையே அலாதி.

இலண்டனில் 'தமிழர் தகவல் நிலையம்' என்ற ஒரு அமைப்பு இயங்கி வருகிறது. அமெரிக்க மாநாடு பற்றி ஏதா

உதாரணத்திற்குச் சில:

- ''எங்கள் காலகட்டத்தின் மிகப்பரிதாப நிகழ்வு, சிலரின் வன்முறையில் தங்கியிருப்பதை விட பலரின் மௌனத்தில்தான் அதிகம் தங்கியுள்ளது'' (மாட்டின் லூதர் கிங்)
- ''ஒரு மனிதன் உயிர்த்தியாகம் செய்வதற்குரிய இலட்சியம் எது

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கல்விப்பணியில் இராமநாதனும் நாவலரும்

நாவலர் மறைந்த சில காலத்துக்குப் பின் நாவலரின் மருமகனும் சிறந்த உரையாசிரியருமான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையால் இச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. இவருக்குப்பின் திருவாங்கூர் உயர் நீதிமன்ற நீதிபதியாய் இருந்து இளைப்பாறிய திரு செல்லப்பாபிள்ளை இச் சபையை நடாத்தி வந்தார் இவருக்குப் பலர் உதவி புரிந்தனர். இச்சபை சைவப் போதகர்களை நியமித்ததோடு 'இந்து சாதனம் என்ற பத்திரிகையையும் ஆரம்பித்தது. இவர்களே 1889ம் ஆண்டு யாழ்.இந்துக்கல்லூரியை ஸ்தாபித்தனர். இக்கல்லூரிக்கு உதவிநன் கொடை 1895ம் ஆண்டு வழங்கப்பட்டது. இந்துக்கல்லூரியைக் கட்டியெழுப்பியபெருமைஅப்புக்காத்து நாகலிங்கம், திரு.பசுபதிசெட்டியார்,வழக்கறிஞர் காசிப்பிள்ளை,பத்திராசிரியர் சபாபதி முதலியோரைச் சாரும். இப்பொழுது திரு.வை. துரைசுவாமி அவர்கள் முகாமையாளராக இருக்கிறார். இக் கல்லூரி அரசாங்கத்தால் 1902ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட சபையால் நடாத்தப்படுகிறது. இச் சபைக்குத் தலைவராக இறக்கும் வரைக்கும் சேர் அம்பலவாணர் கனகசபை இருந்தார்.

## சேர் பி.இராமநாதன்

## பணிகள்

சேர்.பி.இராமநாதன் கல்விக்குப் பொதுவாகவும், இந்துக் கல்விக்குச் சிறப்பாகவும் ஆற்றிய தொண்டைப் போல் வேறு ஒருவரும் ஆற்றவில்லை என்று கூறலாம். இராமநாதன் கல்லூரியையும் பரமேஸ்வராக் கல்லூரியையும் கட்டுவதற்கும் அவற்றுக்குமூலதனமிடுவதற்கும் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்துள்ளார். பெண்கள் கல்லூரியை நடாத்துவதற்கு

ழ்ப் பாடசாலைகள் ஆறுமுக நாவலர் 1847ம் ஆண்டு சைவப்பிரகாச வித்தியாலயத்தை வண்ணார்பண்ணையில் ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஸ்தாபிக்கப்பட்டவையாகும். அவருக்கு முன் தொடக்கப்பட்டபாடசாலைகள் ஒன்றில் மூடப்பட்டன அல்லது உதவி நன்கொடை பெறுவதற்காக மிஷனறிமாரிடம் ஒப்படைக்கப்பட்டன மிஷனறிமார் பள்ளிக்கூடத்தை நடாத்துவதுடன் நில்லாது அந்த பாடசாலைக்குச் சேர்ந்த காணியையும் கட்டிடத்தையும் எடுத்துக் கொண்டனர்.

இப்பொழுது இருக்கும் இந்து தமிழ்ப் பாடசாலைகளின் தொகை சுமார் 150 இருக்கும் சமீப காலம் வரை ஒரு இந்துப் பாடசாலையை தொடக்குவது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. மிஷனறிமார் மத்திய கல்விக் கமிஷன் காலத்தில் கிடைத்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு இந்துக்கள் புதுப் பாடசாலைகளைத் தொடக்குவதை வெற்றிகரமாகத் தடுத்து வந்தனர். காலத்துக்குக் காலம் கல்விச் சட்டங்களை அரசாங்கத்தைக்கொண்டு மாற்றி அமைத்து வந்தனர். ஒரு விதானையார் இந்துப் பாடசாலை ஒன்றை தொடக்கினார். இதனை பாதிரிமார் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அரசாங்க அதிபர் விதானையை அழைத்து ''நான் உம்மை பாடசாலையை மூடும்படி கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்யாவிட்டால் விதானை வேலையை இழந்து விடுவீர்'' என்று கட்டளை இட்டார். இதற்கு விதானையார் ''ஒரு தர்ம காரியத்தைச் செய்வதற்காக ஏன்விதானைவேலையை விட வேண்டும்''என்று கேட்டார். கடைசியாக விதானையாரும் விதானையாராக இருக்க அவர் தொடங்கிய இந்துப் பாடசாலையும் நடைபெற்று வந்தது இப்படிப் பல அச்சுறுத்தல்களை மிஷனறி மார்

ஒரு மைலுக்குள் கட்டப்படாது. இந்துக்கள் வாழும் கிராமத்தின் மத்தியில் ஒரு கிறிஸ்தவப் பாடசாலை கட்டப்பட்டு இருந்தால் ஒரு இந்துப்பாடசாலை புதிதாகக் கட்டவேண்டுமாயின் கிராம எல்லையில் தான் கட்டவேண்டும். இந்தச் சட்டம் 1926ம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது. இந்த விடயம் பற்றி ஒரு சம்பவத்தை நான் அறிய முடிந்தது. பெரும் செலவில் கட்டப்பட்ட பௌத்த பாடசாலை இந்தச் சட்டத்தை திருப்தி செய்வதற்காக சில யார் தூரத்தில் கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முன்பு கிறிஸ்தர்களுக்கு பாடசாலை கட்டுவதற்கு நிலமும் கட்டிடமும் கொடுத்தவர் இப்பொழுது அதற்கு அருகில் ஒரு இந்துப்பாடசாலையைக் கட்டியதால் அதற்கு நன்கொடை கொடுபடவில்லை. இதனால் அவர் பெரும் நட்டமடைந்தார். 1926க்குப் பின் இந்தத் தடை நீக்கப்பட்ட பின்னர் கட்டப்பட்ட பாடசாலைகள் உதவி நன்கொடை பெற்று செழித்து ஓங்க, முன்பு இருந்த கிறிஸ்தவ பாடசாலைகள் மூட வேண்டி ஏற்பட்டது. ஏனெனில் அங்கு படிக்க கிறிஸ்தவ மாணவர்கள் இல்லாமையே ஆகும்.

இதுமிகவும் திருப்தியற்றது. ஆகும், நான் இதைப்பகிரங்கமாக அரசாங்க சபையில் கண்டித்தேன். எனக்கு ஆதாரமாக சட்லர் (Saddler) கமிசனின் சிபார்சுகளை எடுத்துக்காட்டினேன். அதன்படி உத்தியோகத்தர் அல்லாதவர்களே இதுபோன்ற சபைகளில் பெரும்பான்மையினராக இருத்தல் வேண்டும். என்னுடைய கண்டனத்தின் பிறகு மூன்று கிறீஸ்தவரல்லாதவர் இச்சபைக்கு நியமிக்கப்பட்டனர். என்னுடைய கொள்கைப்படி 50% ஆவது கிறீஸ்தவர் அல்லாதவராக இருக்க வேண்டும்.

முன்பு மத்திய கல்விக்கமிஷன் ஆலோசனைப்படி பெரும்பான்மையினரான புரட்டஸ்தாந்து கிறீஸ்தவர்கள் நியமிக்

வது இந்துவாக இருக்கமாட்டார்.

கத்தோலிக்க பாடசாலைகள் கத்தோலிக்க மாணவர்கட்காக ஸ்தாபிக்கப்படுகின்றன. இவற்றில் இந்துமாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு சேர்க்கப்படும் இந்து மாணவர்களில் சிலராவது கத்தோலிக்கராக மாற்றப்படுகின்றனர்.

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

இச் சங்கம் 1923ம் ஆண்டு இந்துக்கல்வியை பரப்புவதற்காக ஸ்தாபிக்கப்பட்டது. அதன் நோக்கங்கள் பின்வருமாறு:-

**தமிழில்:**
**ச. அம்பிகைபாகன்**

கப்பட்ட போது டாக்டர் பொன்ஜீன் என்னும் கத்தோலிக்க பிஷப் பின்வருமாறு கூறுகிறார். ''பெரும்பான்மையான புரட்டாஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இச்சபையில் நியமிக்கப்பட்டது கத்தோலிக்கருக்கு அச்சத்தை விளைவிக்கிறது''

1905ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட கல்விக்கமிஷனில் பின்வரும் கூற்றுக்கு நாம் நன்றியுள்ளவராக இருத்தல் வேண்டும். மக்களிடமிருந்து பெறும் வரிப்பணத்தை மதம் மாற்றும் இயக்கங்களுக்கு கொடுப்பது அநீதியாகும். 1923இல் கத்தோலிக்கர் வெளியிட்ட ஒரு துண்டுபிரசுரத்தில் புரட்டாஸ்தாந்து பாடசாலை

(1) இலங்கையில் எங்கு இந்துப்பாடசாலைகள் தேவைப்படுகின்றனவோ அங்கு இந்துப் பாடசாலைகளைத் ஸ்தாபித்தல்.

(2) இப்போது இருக்கும் பாடசாலைகளில் சிலவற்றை இச்சங்கத்திடம் ஒப்படைத்தால் அவற்றை நடாத்துதல்

(3) இப்போது இருக்கும் பாடசாலைகளுக்குத் தேவையான உதவி செய்தல்.

(4) இந்து மாணவர்கள் இந்துபாடசாலைகளிலேயே கல்விகற்க வேண்டும் என்று பிரசாரம் செய்தல்.

(5) தமிழ் இலக்கிய சங்கிதம், நாடகம், முதலியவற்றின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தல்.

இச்சங்கத்தின் யாப்பு ஜனநாயக முறையில் செவ்வனே அமைக்கப்பட்டுள்ளது சும்மா இருந்துகொண்டு குறைகூறுபவர்கட்கு அதில் இடமில்லை. வருடசந்தாவாக பத்து ரூபாவும் அல்லது ஆயுள் சந்தாவாக நூறு ரூபாவும் கொடுத்தால் ஒருவர் நிர்வாகசபை அங்கத்தவரை தெரிவுசெய்யும் உரிமை பெறுவர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை அங்கத்தவர் ஒரே முறையில் 1000 ரூபா அல்லது வருட சந்தா 50/- கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காதவர்கள் நிர்வாக சபையில் இருக்கமுடியாது இப்பொழுது இந்தச்சங்கம் 58 பாடசாலைகளையும் ஒரு ஆசிரியகலாசாலையையும் ஆண்களுக்கு என ஒரு அனாதசாலையும் நடாத்துகின்றது. கூடிய விரைவில் பெண்களுக்கு என ஒரு அனாதசாலை ஏற்படுத்த வேண்டும். இது அத்தியாவசியமான தேவையாகும்.

இந்துக்களின் இந்த கல்வி இயக்கம் யாழ்ப்பாண இந்துக்களின் பாரம்பரிய கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்கே. நாம் முதற் செய்யவேண்டியது கிராமப் பாடசாலைகளை நம்வசப்படுத்துதல். ஏனெனில் பெரும்பாலான மக்கள் கிராமத்திலேயே வாழ்கிறார்கள். நாம்பிள்ளைகளை பிற மதத்தவர் வலையில் விழவிடாது காப்பாற்ற வேண்டும் பாடசாலைச் சூழலும் வீட்டுச் சூழலும், வெவ்வேறாக இருந்தால் மாணவர்களுக்கு நஷ்டம் ஏற்படும். நாம் நமது பாடசாலைகளை சிறந்த சைவச் சூழல் உள்ளனவாக வளர்த்தல்வேண்டும்.

இந்துக்கல்வி இயக்கம்கிறீஸ்தவர்கட்கோ அல்லது வேறு யாருக்குமோ எதிரானதல்ல. மற்றையோர் தலையீடு இல்லாமல் எமது கலாசாரத்தை நாம் வளர்க்க விரும்புகிறோம். இது சிலருக்கு கசப்பாக இருக்கக்கூடும் நாங்கள் மற்றையவர் அலுவல்களில் தலையிட விரும்பவில்லை.

மேல்நாட்டுக் கலாசாரத்தை நாம் எதிர்க்கவில்லை. அதில் நல்லவற்றை நாம் ஏற்றுக் கொள்வோம். ஆனால் அந்தக் கலாசாரம், நமது கலாசாரத்

[12ம் பக்கம் பார்க்க]

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி இந்து இளைஞர் சங்கத்தின் சார்பில் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் 1930ம் ஆண்டில் கொழும்பில் நிகழ்த்திய ஆங்கில உரை.

## யாழ்ப்பாணத்தில் இந்துக்களின் கல்வி வரலாறு — 4

இன்னொரு சட்டத்தின்படி ஒரு பாடசாலையைத்தொடங்கி ஐந்து வருடம் சென்ற பின்னர்தான் உதவி நன்கொடை கொடுக்கப்பட்டது. சில காலத்துக்குப்பின் இந்த ஐந்து வருடம் இரண்டு வருடமாகக் குறைக்கப்பட்டது நெடுங்காலத்துக்கு அந்தப் பாடசாலைகள் செவ்வனே நடைபெற முடியவில்லை. சிலர் பணக் கஷ்டத்தினால் தாம் தொடங்கிய பாடசாலைகளை மூடி விட்டனர். 1926ம் ஆண்டு தொடக்கம் ஒரு பாடசாலையைத் தொடங்கி ஓர் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இதற்குப்பின்னர் சில மாதங்களுக்குள்ளேயே பதிவு செய்யக்கூடிய மாற்றம் ஏற்பட்டது. இந்த இரண்டு திருத்தங்களையும் நான் அரசாங்க சபையில் கொண்டுவந்து அரசாங்கத்தின் உதவியுடன் நிறைவேற்றி உள்ளேன் இதற்கு மேலாக கல்வி ஆலோசக சபைக்கு என்னை ஒரு அங்கத்தவராக நியமித்தனர்.

## ஆலோசகசபை நியமனம்

இதற்கு முன்பு கல்வி அதிகாரி கல்விஆலோசக சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் பொழுது மிஷனரிமாருடன் ஆலோசித்து கிறீஸ்தவர்களை நியமித்தார். நெடுங்கால கிளர்ச்சியின் பின்புதான் கிறீஸ்தவரல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர்தான் திரு டி.பி. ஜயத்திலகா. இப்பொழுது இருக்கும் ஆலோசக சபை 1920ம் ஆண்டு சட்டப்படி நியமிக்கப்பட்டது.

கள் இலங்கையில் மதம்மாற்றுவதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டது என்று கூறியுள்ளனர் அவர்கள் கூறுவது இந்தப் பாடசாலைகட்கு பெருந்தொகையான பணஉதவி இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து கிடைக்கின்றன. இந்தப் பணஉதவி பிள்ளைகளைமதம்மாற்றுவதற்கு உதவி செய்யும் பொருட்டே அனுப்பப்பட்டது. கட்டாயக் கல்வி நடைமுறையில் வந்தால் தங்கள் பாடசாலையில் கிறிஸ்தவம் சகலருக்கும் போதிப்பதற்கு தடை ஏற்படும். மறுசமய பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றாரின் அனுமதியின்றி கிறிஸ்தவம் போதிக்க முடியாது. தாங்கள் நினைத்தபடி கிறிஸ்தவ மதத்தை சகலருக்கும் போதிக்க முடியாது விட்டால் அவர்களின் நோக்கம் பிழைத்து விடும்.

## லோட்மக்கோலே கருத்து

இந்தியாவில் மிஷனறிமார் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு சட்டம் இயற்றிவிட்டு லோட் மக்கோலே Lord Macaulay கூறியது பின்வருமாறு:- ''கிறிஸ்தவ கல்வியின் பெறுபேறு அபாரமானது, ஆங்கிலக்கல்வியை பெற்ற ஒரு இந்துவாவது தனதுசமயத்தில் பற்றுவைக்க மாட்டான்'' சிலர் வேஷத்துக்கு மாத்திரம் இந்துவாக நடிக்கிறார்கள். சிலர் கிறிஸ்தவர் ஆகிறார்கள். எங்கள் கல்வி முறை சரியாக நடைபெற்றால் மாகாணத்தில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் ஒருவரா

## இந்துக்கல்வி விருத்திக்கு தமது சொந்தப்பணத்தில் பத்து லட்சம் ரூபாவை இராமநாதன் செலவிட்டார்

ஒரு தர்மகர்த்தா சபையை ஏற்படுத்தியுள்ளார். ஆண்கள் கல்லூரியை நடாத்துவதற்கு அரசாங்க சபையின் அனுமதியுடன் ஒரு சபை நிறுவியுள்ளார். இந்துக் கல்வியின் வளர்ச்சிக்காக ஆறுமுகநாவலரும் இராமநாதனும் ஆற்றிய சேவையை பிற்சந்ததியார் ஒரு போதும் மறக்க முடியாது.

இலட்சாதிபதியான புத்தூர் மழவராய கந்தையா தமது ஊரில் ஒரு கல்லூரிக்காக கட்டிடம் அமைத்து வருகிறார். இது 1930ம் ஆண்டு திறக்கப்படும். வேறு பல தர்மசீலர்களும் இந்துக் கல்லூரிகளையும் வித்தியாசாலைகளையும் ஸ்தாபித்து செவ்வனே நடாத்தி வருகின்றனர்.

## சமீபகாலத்தில் இந்துக்கல்வி

இப்பொழுது இருக்கும் தமி

செய்து வந்தனர்.

## முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கும் முட்டுக்கட்டைகள்

இந்துக்களின் கல்விக்குதடையாக இருக்கும் அரசாங்கச் சட்டங்களை சிறிது விரிவாக ஆராய்வோம், (1861ம் ஆண்டில் இயற்றப்பட்ட)பின்வரும் சட்டத்தை சிறிது விரிவாக ஆராய்வோம். இச்சட்டம் வருமாறு:

இப்பொழுது நடைபெற்று வரும் பாடசாலைகளுக்கு அருகில் அதே போன்ற பாடசாலைகள் கட்டக்கூடாது. அப்படிச் செய்தால் உதவி நன்கொடை கொடுபடமாட்டாது.

அருகில் என்பது தெளிவாக ஓரிடத்திலும் விளக்கப்படவில்லை. ஒரு சட்டத்தின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் உபகரித்த மூன்றுவது சோதிட நூல்

க. சி. குலரத்தினம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் மேற்குப் பகுதியில் அராலிஎன்னும் ஊர், சைவத்தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்று அந்தணர் இருப்பிடங்களும் வைசியர் வாழ்மனைகளும், உழவர்உவந்த மருத நிலப்பரப்புகளும், கடல்தரு திரவியங்கருதி வாழ்ந்தோர் நிலங்களும் அங்கேநெருக்கமாக இருந்தன.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கந்தஞானியார், சின்னச் சாத்திரியார் என்பார்கள் சோதிடம் வைத்தியம் அறிந்த சித்தர்களாயிருந்தார்கள். அங்கே இராமலிங்கர் என்னும் சோதிடரும், முத்துக்குமாருப்புலவர் என்னும் முத்தமிழ்வித்தகரும் விசுவநாதர் என்னும் சோதிடநிபுணரும். பெரும் பெயர்பெற்றவர்களாவர்.

ஈழநாட்டில் முதலில் தோன்றிய சோதிடநூல் சரசோதி மாலை. அடுத்துவந்தது செகராசசேகரமாலை. இந்தஇரண்டு நூல்களையும் கருத்தூன்றிக் கற்றவர் இராமலிங்கர் என்பார். அவர்திரிகாலங்களையும் நன்கறிந்தவராதலால் அவரை எல்லோரும் முனிவர் எனவே வழங்கிவந்தார்கள்.

## முதலிலெழுந்தவாக்கிய

## பஞ்சாங்கம்

இராமலிங்கர்தம் நுண்கலை விருத்தியால் காலக்கணிதம், வானசாத்திரம் முதலிய துறைகளில் வல்லவராஞர். அவர் இளமைக்காலத்திலேயே இத்துறையில் நாட்டமுடையவராய்த்தமது பதினெட்டாம் ஆண்டுப்பராயத்தில் 1667 ஆம் ஆண்டில் வாக்கியபஞ்சாங்கம் ஒன்றைக்கணித்துப் பலருக்கும் பயன்படச்செய்தார். இராமலிங்கரின் நாட்டமும் விவேகமும் அவ்வளவில் அமையவில்லை. அவர் மேலும்தமது துறைகளில் வெகுவாக ஈடுபட்டுவந்த காலத்தில் தமிழ்ப் புலமையுண்டாகிப் பழமொழிப்பிரபந்தம் என்றொரு நூலையும் செய்தார்.

தாம் நன்ருக ஆராய்ந்து கற்றுவந்த சரசோதிமாலை, செகராசசேகர மாலை என்னும் சோதிடநூல்களில் விரித்துக்கூறப்பெருத சிலவிடயங்களைத் தாம்வேருருபாணியிற் கூறவிரும்பித்தம் புலமை கைகொடுக்க விருத்தப் பாவில் சந்தானதீபிகை என்னும் நூலைச்செய்தார் இலக்கியமல்லாத இந்தநூல், அழகு தமிழில் அமைந்தமையால் இதனையும் தமிழ்நூல்வரிசையிற் கொள்வர்.

## சந்தானம் ஒருபேறு

சந்தான தீபிகை இவ்வாழ்வில் சந்தானத்தின் இன்றியமையாமையைக் கூறுவதோடு, பிள்ளைகளால் உண்டாகும்பயன், பேறு, புகழ் முதலியவற்றையும் முறையாகக்கூறும் ஆண்பிள்ளை சந்ததிக்குப்புகழ் தருவதோடு, பிதிர்காரியம் செய்யவும் உதவுவான் என்றும், பெண்கன்னிகாதானமாகக் கொடுக்கப் பெறும்போது, பெருந்தருமச் செயலுக்கு உதவுவாள் என்றும்கூறுவர்.

பிள்ளைச்செல்வம் இல்லாதவரின் இயல்பு, குறைபாடுடைய பிள்ளையைப்பெறுதல், ஒரேயொருபிள்ளையைப் பெறுதல், நல்லபிள்ளைகள்வாய்த்தல், கெட்டபிள்ளைகள் பிறந்தல், பிள்ளைகளுக்குண்டாகும் நோய்கள், சிறுவயதில் அகால மரணமடைதல் முதலியன யாவும் சந்தான தீபிகையில் முறையாகவந்துள்ளன.

## நற்கருமங்களுக்கு

## நாள் கூறும் தீபிகை

இன்றுநாம் நற்கருமங்கள் செய்வதற்குரிய நாள்களைப் பஞ்சாங்கத்தில் பார்த்தறிகிறோம். நாள்பார்த்து நாழிகை கவனித்து நற்கருமஞ் செய்யும் விதியும் பழக்கமும் நம்

ஏடு தொடங்குதல் என்னும் வித்தியாரம்பம் செய்தல் முதயன குழந்தைகளுக்கு விதிக்கப்பெற்றன.

இனிவேளாண்மையே நாகரிகமான தொழிலானதால் அதற்கானகருமங்கள் செய்வதற்கான காலம் நாள், நாழிகை முதலியவற்றை வரையறைசெய்து, ஏர்மங்கலம் குடில்வைத்தல் விதைத்தல் அறுவடை செய்தல் முதலியதொழில்களைச் சற்கருமங்களாகக்கூறும்.

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்ற நூலாயினும் சந்தானதீபிகை தமிழ் மூலத்திலெழுந்த வண்ணம் அமைவாகவுள்ளது. இந்நூல் 122 பாடல்களைக் கொண்டது என்றும் 1713 ஆம் ஆண்டு தைமாதத்தில் உருவானதென்றும் இதிலுள்ள பாடல்ஒன்று குறிப்பிடுகின்றது. அதுநந்தன வருடம் மகாத்திங்கள் வியாழன் பூசம் என்றெல்லாம் வரும் பாடலாகும்.

## தமிழ் தந்த தாதாக்கள்

திருமணஞ் செய்தல் உடலுக்காகவன்று என்றும், இருமைப்பயன் பெறவென்றும், அது ஒருகடமை என்றும் தர்மம் என்றும் ஆச்சிரமநெறி என்றும் கூறுவர். பிள்ளைகளைத்தவஞ்செய்து பெறுதல் வேண்டும் என்று நீதிகூறத் தொடங்கும் நூல்; பன்னிரு பாவங்கள், அவற்றின்பயன்கள் என்பனவற்றையும் கூறும்.

மிடத்தில் நன்ருகஊறிவிட்டன. இவையாவும் ஒரு பழையமரபில் வந்தவை. அந்த மரபுவழக்கம் சந்தானதீபிகையில் நன்ருகவிளக்கம் பெற்றுள்ளது.

மக்கள்வாழ்வில் குழந்தைப் பராயம் முதல்செய்ய வேண்டிய நற்கருமங்கள்பலவுள. மயிர்நீத்தல், காதுகுத்துதல், ஐம்படைத்தாலி என்னும் பஞ்சாயுதம் தொங்கவிடுதல்,

இலங்கையில் முதல் முதல் வாக்கிய பஞ்சாங்கங் கணித்த சந்திரசேகரர் மைந்தர் இராமலிங்கர் பெருமைபெரிது. இவரின் சந்தானதீபிகை 1868 ஆம் ஆண்டில்தமிழ் நாட்டில் அச்சிடப்பெற்றது. பின்னர் யாழ்ப்பாணத்தில் பொழிப்புரையுடன் வெளியிடப்பெற்றுவந்தது அது கொக்குவில் சோதிடபரிபாலனஞ் செய்வோரிடம் உள்ளது.

---

# மஹாகவியின் கொள்கை

# ஒரு கதையின் வித்து

மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் காவியத்தில்வரும்.

''அன்று பிறந்து
இன்று இறப்பதுள்
ஆயதன்றுநம்மானிடவாழ்வு
காண்
அப்பனே மகனுகி வளர்ந்து
உயிர் ஒய்தல் அற்று
உயர்வு ஒன்றினை
நாடலே உண்மை''

என்றவரிகள் மஹாகவியின் ''இலக்கியக்கொள்கை'' என்றுகூடக் கூறலாம். ஒரு சாதாரணமனிதனது சரித்திரம், காவியத்தில் மூதன்மை பெறுவது வேலுப்பிள்ளையின் மகனுன முத்தையன். முத்தையனின் வாழ்க்கை வட்டத்திறுதியில் முத்தையனின்மகன் வேலுப்பிள்ளை என்னும் பரம்பரைப் பெயருடன் வாழக்கை வட்டத்தைத் தொடங்குகிருன். இதன்மூலம் ஒருமனிதனது வாழ்வுமுற்றுப் பெறுவதில்லை.

அவனது எச்சங்களாகப்பரம்பரை தொடர்கிறது என்ற கருத்தினை மஹாகவி விளக்குகிருர். வள்ளுவரும் ''அவரவர் எச்சத்தால் உணரப்படும்'' எனக்கூறிச் சென்றுள்ளார்

இந்த இலக்கியக்கொள்கை சிறுகதை ஒன்றுக்குக்கருவாகி சிறப்பான சிறுகதையாக மாறியுள்ளதை '½' ஏப்ரல்- ஜூன் 82 இதழைப்படிக்கையில் உணர்ந்தேன். இவ்விதழில் சண்முகம் சிவலிங்கம் எழுதியுள்ள 'இரட்டிக்கும் இருள் முகங்கள்' கதை மஹாகவியின் இலக்கியக்கொள்கையின் புனைகதை வடிவாகிறது சண்முகம் சிவலிங்கம் மஹாகவியில்சிறந்த ஈடுபாடு கொண்டு அவரின் படைப்புக்கள் பற்றிய அருமையான விமர்சனங்களை வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. கெரில்லா என்று ஒருநாய் எஜமானனின் மகனுக்குப் பிடிக்காத ஜீவனுகிறது. அது எப்பொழுது சாகுமென்ற எண்ணத்துடன் உலாவியவனுக்கு அந்த கெரில்லா மரணப் போராட்டத்துள் நுழைந்து விட்டது தெரியவருகிறது. பரிவுக்கும் பகுத்தறிவுக்குமிடை போராட்டம்.இறுதியில் கெரில்லா குற்றுயிராகவே மண்ணுள் அவனுல் சங்கமிக்கப்படுகிறது. மண்வெட்டியை மண்ணில் ஓங்கிக் குத்தியவனின் கண்களின் எதிரே மீண்டும் அதே கறுவல் கெரில்லா வருகிறது. பெரில்லாவுக்குப் பிறந்த குட்டி என பகுத்துணர்கிருன். ''இது இனி இருக்கும்வரை அந்த மூதேவி போனது மாதிரியும் இல்லையே- கட்டாயம் இதை விஷம் வைத்தென்ருலும் கொல்லத்தான் வேணும்'' என முணுமுணுத்தபடியே குனிந்து எதையோ பொறுக்குகிருன். அதன் மேல் வீசுவதற்காக!இது இரட்டிக்கும் இருள் முகங்களின் சுருக்கம்''

மஹாகவியின் கவிதை சண்முகம் சிவலிங்கத்தில் புனைகதையாகிறது மஹாகவியின் கவிதைக் கவர்ச்சியுள் ஊறிய சண்முகம் சிவலிங்கம் ' அப்பனே மகனுகி வளர்ந்து' வருவதை ஒரு கதையாக்கிவிடுகிருர். இதுதான் இலக்கியத் தொடர்ச்சி என்பது.

■ பற்றிமாகரன்

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் இலனுகின், அவன் உயிர் வாழ்வதற்குரிய இலட்சியம் ஏதும்இனங் காணுதவனுயிருப்பான், (மாட்டின் லூதர் கிங்)

● ''சுதந்திரத்தினதும் விடுதலையினதும் பாதுகாப்பை வரலாறு பலவீனர்களிடமும் பயந்தவர்களிடமும் நெடுநாளைக்கு விட்டு வைப்பதில்லை''
(டுவைற் ஐஸன்ஹோவர்)

● ''நல்ல மனிதர்கள் வாளாவிருப்பதே அக்கிரமத்தின் வெற்றிக்கு போதுமானது''
(எட்மன்ட் பேர்க்)

● ''மனித உரிமை ஜனிப்பது ஆட்சி அமைப்பில் இருந்தல்ல, அனைத்தும் வல்ல ஆண்டவனிடமிருந்தே!''
புறநானூற்றுப் பாடல்:

---

தணிக்கை

---

(ஜோன் கென்னடி)

ஜனுதிபதி ஜே ஆர் அமெரிக்காவில் ஜனுதிபதி றீகனை ஜூன் மாதம் 18ம் திகதி சந்திக்கவிருப்பது தெரிந்ததே

உண்ணுவிரத

மௌனவிரத

விஸாரட்சகை

மகாரசிங்கம்!

யாழ்நகரில் கழுத்தில் ஒரு நகைக்கடை விளம்பரப்

---

ஆசிரியர் : டேய் சியாமளன் கடன் வாங்கிக் கழித்தல் போடு என்ருல் ஏன் போடாமல் இருக்கிருய்?
சியாமளன்: எங்கேனும் கடன் வாங்கினுல் எங்கப்பா உதைப்பதாகச் சொன்னுர் சேர்

★

பஸ் கண்டக்டர்: ஆச்சிஎங்கை போருய்?
ஆச்சி: இப்படி அபசகுனமாய் ... கேட்காதை. நான் வீட்டுக்குப்போறன்.

- கிரி

---

# அமெரிக்காவில்

# அனைத்துலகத் தமிழ் மாநாடு

''பட்டி'' கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு நகர்வலம் வரும் ஒரு உயர்ந்த மனிதரை எவரும் கவனிக்காமல் இருக்க முடியாது.

அது போல—

தமிழ்மக்களின் உரிமைகளுக்காக, தனது கழுத்தில் தமிழ் பிரச்சனைபற்றி சுலோகங்கள் தங்கிய ஒரு பட்டியைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு —இலண்டனில், நியூயோர்க்கில், லோஸ்ஏன்ஜல்ஸில், சான்பிரான்சிக்கோவில், வாஷிங்டனில், கலிபோர்னியாவில், பிலடெல்பியாவில், அண்மையில் ஜெனீவாவில்— இப்படி உலகவலம் வந்து, ஆங்காங்கே உண்ணுவிரதம்—மௌன விரதம் என்றெல்லாம் பொது நிகழ்ச்சிகளின் போது, உலக வைபவங்களின்போது, பொதுவிடங்களில் உட்காந்து (சில சந்தர்பங்களில் தன்னந்தனியாக உட்காந்து) அமைதிப் பிரசாரம் செய்துவரும் ஒரு மனிதர் இருக்கிருர்.

ஆஜானுபாகுவான ஆறடி உயரம், உண்ணுவிரதம் இவர் உடலுக்கு நல்லதுதான் என்று சொல்லத் தோன்றும் உடற்கட்டு, மன உறுதியும், சேவைமனப்பாங்கும், தமிழ் உணர்வும் மிக்கஇவர், இலங்கையில் ரயில்வேஸ்டேசன் மாஸ்டர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தவர். 1958ன் பின்னர் இலண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கிவருகிருர். தமிழர் செயற்பாட்டுக் குழுவின்தலைவர் எஸ். மகாரசிங்கத்தை இலண்டனில் அறியாதவர் இலர்-இலண்டனில் விஸா இல்லாமல் திணறும் அதனுல்சில வேளைகளில் சிறையில் அடைபட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு இவர் ஒரு கொழுகொம்பாக இருக்கிருர். அவர்களுக்காக மனுக்கள் எழுதுகிருர்; தட்டச்சு செய்கிருர்; குடிவரவு அலுவலகப் படியேறி இறங்குகிருர்; எம் பி.க்களின் ஆதரவைப் பெற்றுத் தருகிருர்; குடிவரவுத்துறைக்கான அமைச்சர் வரை சென்று கெஞ்சியும் வாதாடியும் சலுகை கோருகிருர், தோல்விகள் எத்தனை தான் வத்தாலும் தளராமல், துணிந்து, துரிதமாக இயங்குகிருர்-இவரது அறையின் விளக்குகள் கொடும்பனி காலத்திலும் விடிய விடிய எரிகின்றன, ஓய்வு ஒளிச்சல் இல்லாமல் இயங்கிவருகிருர்.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ. நா. வின் மனிதஉரிமைகள் குழுவின் மகாநாட்டிற்கு மகாரசிங்கம் சென்றிருந்தார். மாநாட்டு மண்டபத்தின் வெளியே தனது உண்ணுவிரதப்பட்டியைத் கழுத்தில் கொழுவிக்கொண்டு தன்னந்தனியாக நின்று துண்டும்பிரசாரம் விநியோகித்திருக்கிருர். பொலிஸார் வந்து இவரை அப்புறப்படுத்த முயன்றபோது, தான் மௌனவிரதம் இருப்பதாகவும், குழுத்தலைவரிடம் ஒரு மகஜரைக் கையளிக்கவிட்டால் தாஞகவே போய்விடுவதாகவும் சைகைபாஷயில் சொல்லியிருக்கிருர்

அதன் விளைவாக—

குழுத்தலைவரை மகாரசிங்கம் சந்திக்க முடிந்தது: பிரச்சினைகளைச் சுருக்கமாக எடுத்துக் கூறி மகஜரைக் கையளிக்க முடிந்தது.

இதன் பின்—சுவிட்சர்லாந்தில் போன்நகரில் புகலிடம் தேடிப் புகுந்திருந்த தமிழ் இளைஞர்களை நேரில் சென்று சந்தித்து ஆதரவு கூறிஞர்

ஜெனீவாவிற்கு வந்திருந்த தமிழ் தலைவர்கள் எவரும் இந்த இளைஞர்களைச் சென்று பார்கவில்லை என்று தெரிய வருகிறது.

---

## இந்தியாதான் காரணம்

'இந்தியா ரூடே': 77 வயதிலும் நீங்கள் திடகாத்திரமாக இருப்பதன் இரகசியமென்ன?

ஜனுதிபதி ஜே. ஆர்: இந்தியாதான் காரணம். ஏனெனில் அந்த நாட்டின் மாபெரும் புதல்வன் புத்தபிரானை நான் பின்பற்றுகிறேன்.

'இந்தியா ரூடே' ஆசிரியரின் கேள்வியொன்றும் அதற்கு ஜனுதிபதி அளித்த பதிலுமே இதுவாகும்.

- அனந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் எனது தாய்மொழி

- கண்ணதாசன்

மயக்கம் எனது தாயகம்
மௌனம் எனது தாய் மொழி
கலக்கம் எனது காவியம் நான்
கண்ணீர்வரைந்த ஓவியம்''
—கண்ணதாசன்

## தளராதே

ஒருபோதும்எடுத்த காரியத்தைக் கைவிடாதே! எத்தனையோ சந்தர்ப்பங்கள் திருப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அவைகள் ஊக்கமுடையவர்களுக்கு நிச்சயம் உதவி செய்யும். மிகப் பெரிய நெருக்கடிக்கிடையே தான் வெற்றி காண வழியும் பிறக்கும். எனவே மனம் தளராதே! துன்பமும் இன்பமும் உலக இயல்பு! அதை உணர்ந்து எவனொருவன் செயலாற்றுகிறனோ அவனே வெற்றி பெறுவான்.

—ஹோரஸ்

## நம்பிக்கை

நம்பிக்கை
நார் மட்டும்
நம் கையில்
இருந்தால்
உதிர்ந்த
பூக்களும்
ஒவ்வொன்றாய்
வந்து
ஒட்டிக் கொள்ளும்
கழுத்து
மாலையாகவும்
தன்னைத்தானே
கட்டிக்கொள்ளும்
—பி கோபுராஜ்

## அமெரிக்கர்களை உலுக்கியது

அமெரிக்க தொலைக் காட்சிச் சேவை ஒன்றினால் தயாரிக்கப்பட்ட 'த டே ஆஃப்டர்' என்ற தொலைக் காட்சித் திரைப்படம் அமெரிக்கர்களை உலுக்கிவிட்டிருக்கிறது. அணு ஆயுத யுத்தமொன்றினால் ஏற்படும் அழிவை இது சித்தரிக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்த பலர் மனக் குழப்பமடைந்துள்ளனர்.

## சட்டத்தின் நோக்கம்

சட்டம் பணக்கரர்களுக்கு உபயோகமாக அமைந்து விட்டிருக்கிறது. இல்லாதவனுக்கு அது பொல்லாத தொல்லைகளைத்தான் தருகிறது. இயற்கையாகக் கிடைக்கும் சுதந்திரத்தைக்கூட அது அடைய முடியாதபடி அழித்து விடுகிறது. சொத்தைப்பற்றிப் பல சட்டங்களை இயற்றிச் சமத்துவ மின்மையை அது ஏற்படுத்தி விடுகிறது. புத்திசாலித்தனமான ஆக்கிரமிப்பை அது ஒரு உரிமையாக மாற்றித் தந்து விடுகிறது எதிர் காலச் சந்ததிகள் முழுவதையும் அது உழைப்பு, துன்பம் போன்றவைகளுக்கு அடிமையாக்கி விடுகின்றது. மனிதர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டவர்கள். ஆனால் எங்குபார்த்தாலும் அவர்கள் விலங்குகளைத்தான் அணிந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நோக்கம் சட்டம் இயற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது. அதற்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதாக இருக்கவேண்டும். சட்டங்களின் துணைக்கொண்டு மக்களை ஆளுவதாக இருக்கக் கூடாது. தங்களுடைய கடமைகளை அறிந்துகொள்ளும்படி வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தித்தருவதாக இருக்க வேண்டும்.

-ரூஸோ

## சந்திப்பின் நோக்கம்

''வாக்குவாதம் செய்வதற்காக நாம் சந்திக்க வேண்டாம். மகிழ்ச்சியுடன் இருப்பதாகாகவே சந்திப்போம்.

-எமர்ஸன்

## சாதனைகள்

பிரபல கண்டுபிடிப்பாளரான கோமஸ்அல்வா எடிசன் ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்டுபிடிப்புக்களையும் புதிய புதியதிருத்தங்களையும் செய்தார்.

## ஐ. நா

ஐ நா. சபையில் தற்போது 159 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. கடைசியாகச் சேர்ந்துள்ள நாடு புறூணே. ஐ. நா. சபைஉருவாக்கப்பட்டது 1945-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 24-ம் திகதி

## ஒலிம்பிக்

இந்தவருடம் ஜூலையில் அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏன்ஜல்ஸில் ஒலிம்பிக்விளையாட்டுப்போட்டிநடை பெறவிருக்கிறது. புதிய ஒலிம்பிக் துவங்கமூல காரணமாக இருந்தவர்பிரைஞ்கின் பியா கூபர்டின்.

## இமயம்

இமயமலையின் உயரம் 29 ஆயிரத்து இருபத்தெட்டு அடி.

## கலை

உணர்வால், இதயத்தால் உணரப்பட்டு அளக்கப்படுவது எதுவோ அதுகலை, அறிவால் அளக்கப்படுவது அறிவியல். உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துவதற் கென்றே இருக்கும் மிகச்சிறந்த கருவி கலை..... உலகிலுள்ள அத்தனை பேராலும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே மொழி இசை.

-நாவலர் நெடுஞ்செழியன்

## நமது கூலி

பிறருக்கு [நாம்] செய்யும் உதவிகள் தான், பூமியில் வசிப்பதற்கு நாம் தரும் குடிக் கூலி.

-கிரென்ஃபெல்

## கொய்யாப்பழம்

கொய்யாமரம் தென் அமெரிக்காவினின்று இந்தியாவிற்குவந்ததாகும். அதன் பழத்திலே வைட்டமின் ஸி ஏராளமாகக்காணப்படுகிறது. தக்காளி, பப்பாளி, அன்னாசி, எலுமிச்சை, ஆரஞ்சு, ஆகிய எல்லாப்பழங்களைக்காட்டிலும் கொய்யாப்பழத்தில் வைட்டமின் ஸி தாராளம்.

## இரட்டிப்பு

கேட்டதும் ஒரேகணத்தில் கொடுப்பவன் இரட்டிப் பாகக் கொடுத்தவன் ஆவான்- இங்கிலாந்துப் பழமொழி

## சிறந்தமூலிகை

பசி, உழைப்பு, வியர்வை ஆகியவையே மனிதனுக்கு மிகச்சிறந்த மூலிகைகள்.
- பிரெஞ்சு நாட்டு அறிவுரை.

## நகைச்சுவை

நகைச்சுவை உணர்ச்சி என்பது நிறையப்படிப்பு நல்ல அனுபவம், பரந்த விஷயஞானம் ஆகியவற்றுடன் ஒரளவு சகிப்புத் தன்மையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே தான் மேல்நாட்டினர் ஒரு [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

# ஆயிரம் பார்வையில்

தொகுப்பு: கணேஷ்

## அநியாயம்

'எந்த ஒரு மூலையில் அநியாயம் நடைபெற்றாலும் அது சர்வ உலகின் நீதிக்கும் நியாயத்துக்கும் ஒரு பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்து விடுகிறது''

—மாட்டின் லூதர் கிங் -ஜூனியர்

## எதிர்காலம்

நாம்இப்போது இருக்கும் நிலைக்கு நாம்தான் பொறுப்பு எப்படி நம்முடைய எதிர்காலம் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோமோ அப்படிப் பட்ட எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு நம்மிடம் சக்தியிருக்கிறது. இப்போது நாம் இருக்கும் நிலைக்கு கடந்தகாலத்தில் செய்து முடித்த நம்முடைய காரியங்கள் எப்படிக் காரணமாக அமையுமோ, அமைகின்றனவோ அதே போன்று நாம் இப்போது செய்து வரும் காரியங்களின் தரத்தைப் பொறுத்துத்தான் நம்முடைய எதிர்காலம் அமையும்.

—விவேகாநந்தர்

## போர்விளைவுகள்

மிகப் பெரிய ஒரு போர் ஒரு நாட்டில் மூன்று வகையான படைகளை விட்டுச் செல்கிறது.

அவை ஊனமடைந்தவர்களின் படை, அழுகின்றவர்களின் படை
; ருடர்களின் படை.

—ஜெர்மனியப் பழமொழி

## வேப்பிலையின் பயன்

வேப்பிலையில் கலந்துள்ள மூலிகைப் பொருள்கள் சர்ம நோய்களையும், பல்வலி, ஈறு வீக்கம், வாய்நாற்றம் போன்றவற்றையும் போக்கக்கூடியது. வேப்பம்பூ குடலை சுத்தம் செய்வதுடன் ஜீரணசக்தியை அதிகரித்து பசியைத் தூண்டுகிறது. நீங்காத நரம்பு வலியும், கால், கைக்குடைச்சலும் உள்ளவர்கள், பலவருடங்கள் வாழ்ந்த வேப்பமரத்தின் வேர்பட்டைகளை நீரில்போட்டுக் காய்ச்சி கஷாயமாகத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். அந்த கஷாயத்தை காலைவேளையில் பருகி குணம் பெறலாம்.

# ஞானரசம்

சச்சி

நாமும் பலரிடம் மதிப்பு வைத்திருக்கின்றோம் அவர்களை இழக்க நேரிடும் போது துக்கப்படுகிறோம். பல பொருள்களிலே பற்று வைத்திருக்கிறோம் அவற்றை இழக்க நேரிடும்போது துன்பப்படுகின்றோம். நாம் துக்கத்தை நீக்க வேண்டுமானால் நம் பற்றுக்குக் காரணமாகவுள்ள பொருள்களின் உண்மையியல்பை ஆராயவேண்டும்.

போரிலே உன்னால் அழியப் போகும் பகைவர்களுடைய உடலைப்பற்றித் துக்கப்படுகிறாயா அல்லது உயிரைப் பற்றித் துக்கப்படுகிறாயா?'' என்று கண்ணன் கேட்கிறான். உடல், நீ அழிந்தாலும் அழியாவிட்டாலும் எப்படியாவது ஒரு நாள் அழிந்தே தீருவது. அழிந்து போகும் உடலுக்காகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை அவர்களுடைய உயிர்களுக்காகவென்றால் அவ்வுயிர்கள் அழியாதவை அவற்றை யாராலும் அழிக்க முடியாது இவ்வாறு ஆன்மாவினுடைய முக்கியமான லட்சணமொன்றைக் கண்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்லத் தொடங்கினான். ஒருவன், நான் கொல்லுகிறேன் என்று எண்ணுவதும், நான் கொல்லப்படுகிறேன் என்று எண்ணுவதும் இரண்டும் அறியாமை. உயிரானது கொல்லுவதுமில்லை. கொல்லப்படுவதுமில்லை.

''உயிரானது பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. இல்லாமலிருந்து புதிதாக உண்டாகி விடவில்லை; உண்டாகிப் பிறகு இல்லாமற் போவதுமில்லை. பிறப்பற்ற அந்தப் பொருள் மரணம் அடைவதில்லை. கொல்லப்படுவது உடலே. அது அல்ல.

## அழியாத ஒரு பொருள்

''நைந்துபோன ஆடைகளைத் தள்ளிவிட்டுப் புது ஆடைகளை அணிவதுபோல, உடலைக் களைந்துவிடுகிறது. உயிர் களைந்துவிட்டுப் புது உடலைப் பூணுகிறது'' இதையே கண்ணன் அர்ச்சுனனுக்குக் கூறினான். அழியும் இந்த உடலுக்கூடாக அழியா ஒரு பொருள் நிலைத்து நிற்கிறது. அதுவே ஆன்மாவாகும்.

● கி.லக்ஷ்மணன் எழுதிய 'இந்திய தத்துவ ஞானம்' என்னும் நூலிலிருந்து

# நினைக்கப்படவேண்டியவர்கள் மறக்கப்படுவதில்லை

காலம் எனும் காற்று வீசிக் கொண்டேயிருக்கிறது. நிகழ்வுகளும் நிகழ்ச்சிகளும் நினைவுகளாக மாறிக் கொண்டே செல்கின்றன. நினைவுகளும் தேய்வதுண்டு... மறைவதுண்டு. ஆனால் சில நினைவுகள் தேய்வதுமில்லை. மறைவதுமில்லை மாறாக, அவை படிப்படியான ஒரு மனஉருத்தோற்றத்துடன் வளர்ந்து செல்வதுண்டு, நாம் உண்மையில் அவற்றைமறந்துதான்விட்டோமோ என்று எமக்குள் சிலிர்த்துக்கிளம்புகின்றபொழுதுதான், அவை உண்மையில் மறக்கப்படவில்லை, மனங்களுக்குள் வைத்து வளர்க்கப்பட்டுள்ளன என்பது தெரியவரும்

கமலாதேவி வித்தியானந்தன் அவர்களது நினைவும் அத்தகைய ஒன்று. மனதுக்குள் வைத்து வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

விருந்தோம்பலின் மகிழ்ச்சியால் பூரித்தமுகம், உதாரண புருடன் ஒருவனைவரித்து அவனுடன்வாழ்ந்து, வாழ்வித்து மலர்ந்தஆளுமை, பெற்றுப் புரந்த பிள்ளைச்செல்வங்களால் ஏற்பட்டதிருப்திப் பொலிவு... இவையாவற்றினதும் இணைவும் இசையும்தான் கமலா 'அக்கா'

நினைக்கப்பட வேண்டியவர்கள் மறக்கப்படுவதில்லை. ஏனெனில் இந்தநினைவுகள் தான் சில வாழ்க்கைகளின் உந்துசக்தியாக அமைந்து விடுகின்றது.

கமலாதேவி வித்தியானந்தன அவர்களது வாழ்க்கையும் அப்படிப்பட்டதே. பேராசிரியர் வித்தியானந்தன் என்ற தமிழறிவு விண்கலம் இன்று தமிழுலகு போற்ற உயர்ந்து நிற்கின்றது கமலாதேவி அவர்கள் வழங்கிய இல்லச்செம்மை எனும்தளம் தான அதன் இததனை மேற்செலவுக்குக்காரணமாக அமைந்தது.

கமலா அக்கா அவர்கள் நினைவுக்கான ஒரு காணிக்கையாக, யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழைச்சிறப்புப்பாடமாகச் செய்யும் திறமை மிக்கமாணவருக்கு ஒரு புலமைப்பரிசில் வழங்கப்பெறுகிறது. கமலாதேவி அவர்கள் நினைவு தமிழ்வழியாகத் தொடருகிறது.

கமலாதேவி வித்தியானந்தன் அவர்களது நினைவு மேலும் நீளும் ஏனெனில் நினைக்கப்பட வேண்டியவர்கள் மறக்கப்படுவதில்லை.

சிவி

## பனை நாடு

பழந்தமிழ் நாகரிகத்தில் குமரிக்கண்டம் பெரும் நிலப் பரப்பாயிருந்தது. அதில் ஒரு பகுதி பனைநாடு. பனை நாடு ஏழு பெரும் மாநிலங்களாயிருந்தது. அதில் ஒரு நிலமே யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய பிரதேசம். இதன் சுற்றுடல் கடல் கொண்டதால் அழிந்துவிட்டது. ''பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள'' என்று துறவியார் பாடுகிறார்.

யாழ்ப்பாணம் தனிமாவட்டமாய் விட்டது. இதன் மூல வளம் நாட்டு வளம் பனை வளம். நல்ல வேளை குடா நாடாகி மூன்று பக்கங்களிலும் கடல் வளமும் உண்டு. உள்நாட்டு நீர் வளமும் உண்டு.

தேடுவாரற்ற நிலங்கள் தாழை, கற்றாளை, கள்ளி முதலிய தாவரங்களின் இடமாயுள்ளது கடலேரிகள் நன்னீர்த் தேக்கங்களாகும் போது தேடுவாரற்ற தரைகள் தேடக் கிடையாத தரைகளாக மாற வேண்டும். தேடுவாரற்ற தரைகளில் தென்னையும் பனையும் செழித்து வளர வேண்டும்.

—'மின்னவற் செய்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக் கல்விப் பணியில்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தைவிழுங்க விடமாட்டோம்

நீங்கள் இதுவரையில் அநியாயமா போத்துக்கேயருடையவும் டச்சுக்காரருடையவும், சட்டங்கள் நமது வழிபாடடு முறைகளை தடுத்ததையும் நமது பாடசாலைகளை மூடியதையும் அறிந்து இருப்பீர்கள் ஆங்கிலேயர் எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு மதம் மாற்றத்தில் ஈடுபட்ட கிறீஸ்தவ மிஷனறிமாருக்கு உதவி செய்துவந்தனர். பின்னர் நன்கொடை பற்றிய சட்டங்கள் இந்துக்களுக்கு பாதகமாக இருந்ததைக் கேட்டிருப்பீர்கள். நாங்கள் எங்கள் உரிமைகளை பெறுவதற்கு எவ்வளவு சண்டைபோட வேண்டி இருந்தது என்பதையும் கேட்டிருப்பீர்கள்.

நாம் நமக்குச் சாதகமான நிலையில் இப்பொழுது இருக்கின்றோம். அதை பயன்படுத்தி முன்னேறுவது நமது கடமையாகும் எங்கள் தேவைகள் பின்வருமாறு:-

(1) எங்கள் சாஸ்திரங்களை போதிப்பதற்கு இன்னும் பாடசாலைகள் தேவை.

(2) நிரம்பிய கல்வியுடையவராயும் ஒழுக்க சீலருமான போதகர்கள் எங்களுக்குத் தேவை.

(3) எங்கள் சமயத்தவராகிய இந்துக்கள் எவருக்கும் பயமின்றி தங்களின் சமயத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.

(4) மிருகபலி, தாசிகள் நடனம் வாணவேடிக்கைகள் முதலியவற்றை கோயில்களிலிருந்து நீக்கவேண்டும்.

(5) கோயில்களிலும் மடங்களிலும் நமது புராணங்கள் ஆழமாக படிக்கப்படவேண்டும்.

(6) பேச்சிலும் சிந்தையிலும் செய்கையிலும் தூய்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(7) மக்கள் எளியவாழ்க்கையுடையவராகவும் சிறந்த சிந்தனையாளராகவும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு இந்துப்பிள்ளையும் இந்துப்பாடசாலையில் படித்தால்தான் எங்களின் இலட்சியம் நிறைவுறும்.

(முற்றும்)

## மையக்குறி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

துறையைத்தாண்டி வண்டிகள் சோமசுந்தரத்தார் வீட்டுப் படலைவரைவர ஆகமிஞ்சி மிஞ்சியும் மணி எட்டுக்கு மேல் ஆகவில்லை.

சோமரைத் தவிர எல்லோருமே வண்டிகளைவிட்டுக் குதித்துத் சந்தோஷ ஆரவாரப்பட்டனர்.

பண்டாரிக்குதான், நிலத்திலேயே இல்லைப் போன்ற உணர்வு!

விருந்தையில் சிங்கப்பூர் மான்றில் லைற்று எரிந்துகொண்டிருந்தது.

சிவகொழுந்தி விருந்தையில் இல்லை.

அவள் குசினிக்குள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்!

வண்டிக்குள் இருந்து சோமர் மயக்க நிலையில் இருந்த பெண்ணைத் தூக்கிவந்தார்!

வெளிச்சத்திற்கு வந்தார்!

அவள் முகத்தை அப்போதுதான் பார்த்தார்!

அவள் மூத்தவள் நல்லெண்ணைக் கறுப்பியல்ல.

இளையவள் சிவப்பி!

(தொடரும்)

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு சம்பவங்களால் தொடரும் உதாரணமாக எங்கள் காதலைஎன் தரப்பில்என் வீட்டாரோ, அல்லது என் வீட்டில் உள்ள தாய்விரும்ப தந்தை விரும்பாமலோ, அன்றில் உங்கள் வீட்டில் யாராவது ஒருவர் விரும்பாமலோ ஒரு 'வில்லன்' நிலை ஏற்படும் போது காதல் கொண்ட எம்மிருவரில் ஒருவருக்குத் துன்பம் உண்டாகும் சரி, இதனாலும் எது வித பாதிப்பை அடையாமல் இந்தக் கட்டுக்களை மீறி நீங்களும் நானும் வெள்ளைப் புறுக்களாக சோடியாகப் பறந்துவிடுவோம் நிச்சயம் அப்படிச் செய்யக்கூடியவர்கள் நாங்கள்... அப்படியே சுதந்திரமாகப் பறந்து விட்ட எங்களுக்கு மற்றவர்களைப்போலவே பிள்ளைகள் பிறக்கும். அழுகைக்குரல் வாழ்க்கையை ஓட்டப் போதியவருவாய் இல்லை என்ற நிலைநிச்சயம் வரும் காரணம் நீங்களும், நானும் இந்த மனிதர் கூட்டத்தில் எண்ணக்கூடிய வகையான பொருளாதார அடுக்குள்ளவர்கள் அல்ல. மிகவும் ஏழ்மையான பெருமக்கள் கூட்டத்தில் ஒரு துளியினரே. எனவே, நிச்சயம் பொருளாதாரப் பிரச்சனை வந்தேதீரும் இப்போது நீங்கள் இதனை விளங்காதவராக இல்லைஎன்ற போதிலும் நடைமுறையில் இப்படிக் கஷ்டங்கள் வரும் இறுதியில் பிள்ளைஅழுவதற்கு என் கவலையீனம் தான் காரணம் என்பதில் போய்நின்று அதற்காக எனக்கு காதைப் பொத்தி அடிப்பீர்கள். நான் முதல் நாள் போசாமல் இருப்பேன் மறுநாளும் இருக்கக்கூடும். ஆனால் அழுகைவரவே செய்யும் ஆனல் அடி, உதைக்கதை தொடரும்போது நான் நிச்சயம் வாய் காட்டவே செய்வேன். அச்சந்தர்பத்தில் நீங்கள் என்னை அடிப்பதுடன் நின்ருல் கூடப்பரவாயில்லை. ஆனல் நீங்களே என்னைப்பார்த்துச் சொல்லுவீர்கள், ,என்னடி வாய்காட்டுகிருய் நாயே என்னத்தையடி கொண்டுவந்த நீ? உன்னை வீட்டுக்கு அனுப்பினல் தான் புத்திவரும் 'சரி பகல் சண்டைகள் அல்லது இராச் சண்டைகள்கூடப் பாயில்சமாதானமாகலாம். ஆனலும் தொடர்வதைத் தடுக்கமுடியாதே இத்தொடரை நான் வெறுக்கிறேன். இத்தொடரையேதுன்பம் என்கிறேன் துன்பத்தையே வெறுக்கிறேன். போலியான இன்பத்தையும் தான். உண்மை இன்பத்தையே விரும்புகிறேன்; தேடுகிறேன்.''

நான்அவளை உற்றுப்பார்த்தபடி கேட்டுக்கொண்டிருந்தேன். அவள் என்முதுகுப் புறமாக இருந்தசுவரில் மாட்டப்பட்டிருந்த படம், ஒன்றினைப் பார்த்தபடியே சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் பேச்சை நிறுத்தியதும்' நான் எதனைச்சொல்லுவது; நினைப்பதை எப்படிச்சொல்லுவது என்று சிந்திக்கிறேன்.

''ஆண்கள் மட்டுந்தான் பெண்களை வருத்துவதில்லை'' குத்தலாக மெதுவாகவும் சொன்னேன்.

''கூடுதலாக ஆண்கள் என்றேசொல்லலாம்' தவிர பங்கயம் போன்றவர்களும் பெண்களுக்குள் இருக்கவே செய்கிருர்கள் என்பதை மறுக்கவில்லை. நீங்கள் நினைப்பது போல எனதுவாதம் ஒருதலைப் பட்சமானது அல்ல. முடிவும் அதனல் ஏற்பட்டதல்ல.... எத்தனை வருடக்காதல்......! மதில்களில்கூட அவர்கள் காதல் பற்றிபெருமைப் பட்டவர்களோ, மற்றவர்களோ பாவிக்காத தமிழ்சொற்களில் கீறிஇருந்தார்கள் அப்படியான காதலி, அப்படியானகாதலனை ஆசைநாயகன் மூலம் கொலை செய்வித்தாள்......''

காதல் பற்றிப் பலவியாக்கியானங்களை எடுத்துக்கூறிய அவள் பெண்களுக்கு ஆண்களால் ஏற்படும் வேதனைகளை மட்டுமே கருத்தில் கொண்டு காதல்பற்றி மரத்துவிட்டவளாக தோன்றுகிருள் என முதலில்எனக்கு இருந்த அச்சத்தை இப்போ மாற்றிக் கொண்டேன்.

போசாமல் இருந்துவிட்டுத் திடீரென திரையை பின்னுக்குத் தள்ளியபடி எழுந்தவள் சொன்ஞள்:

போன கடைசித்திருவிழா அன்று— அந்தப்பூங்காவனத் திருவிழா அன்று— இந்த இடத்திலே இரண்டுகலியாணங்கள் நடந்ததே ஞாபகம் இருக்கிறதா? அது என்னவாம்?'' என்றபடி தலையை மேலும் கீழும்ஆட்டினள் அவள்

''ம்........

''அந்த இரண்டுகலியாணங்களும் போட்டிக்கு நடந்தவை மணமகன் விஜயன் வேறு பெண்ணையும், விஜயனின் காதலி ரதி வேறுமணமகனையும் அன்று மணம்முடித்துக் கொண்டனர். விஜயன்— ரதி இரத்தஉறவான இவர்கள் காதலுக்கு இறுதியில் சீதனம் குழப்பம் விளைவித்துவிட்டது. இவர்கள் காதல்சோடியாக எங்குதான் போகவில்லை? கோவில் சினிமா. அநேகமாகத் திருமண ஒப்பந்தம் நிறைவேறிவிட்டமாதிரி நடந்து கொண்டவர்கள் இறுதியில்... இச்சம்பவங்களை 'வீடியோ' போன்று என்மனத்திரையில் பதித்து அவளை ஒருமுறை பார்த்துவிட்டு எனதுசைக்கிளை மீண்டும் பார்க்கிறேன்.

போகப்போகிறீர்களாஎன்றுள்.

......ம்..... என்றேன்.

நீங்கள்கலியாணமே கட்டப் போவதில்லைபோலும் என்றவாறு எழுந்துநின்றேன்.

அவள் சிரித்தாள்.

'இதற்காக இனிமேல் இங்குவராமல் விட்டுவிடக் கூடாது. நாளைக்குவாருங்கள்'' என்றுள். பின்பு சிரித்தாள். நானும் பதிலுக்குச் சிரித்தபடி சைக்கிளை எடுக்கிறேன். இன்று பெளர்ணமிதினம்.

(யாவும்கற்பனை)

## ஆயிரம் பார்வையில்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சி, அவன் உயர்ந்த பண்பாடுள்ளவன் என்பதை எடுத்துக் காட்டுவதாகக் கருதுகின்றனர்-

-துமிலன்

### தமிழர் பரப்பியலை வ

மொசொபொடேமியா ஆப்பிரிக்கா, எகிப்து முதலிய பிறநாடுகளில் இருக்கும் சிவன் முருகன் சிற்பங்கள் தமிழர் தம் நுண்கலைகளையும் பரப்பினூர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். அமெரிக்காவிலுள்ள கொலராடோ ஆற்றங்கரையில் கி மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சிவன்கோயில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது பிலிப்பைன்ஸ் மக்கள் சிவனை ''சிவப்பன்'' என்னும் பெயரால்வழிபட்டனர். இந்தோனேசியாவில் சிவன்கோயில்கள் இருந்தன, இன்னும்சிவனை வணங்குவோர் அங்கு வாழ்கின்றனர். ஜப்பானியர் பழந்தெய்வம் 'சிவோ' எனப்பட்டது. கொரியாவில் வீதிதோறும் சிவன்கோயில்கள் இருந்தன. பாபிலோனியக்களிமண் ஏடுகளில் சிவ என்னும்சொல் மாதப்பெயராக உள்ளது எகிப்துநாட்டு ஆற்றங்கரைகளில் சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டன. சயாம்நாட்டு முடிசூட்டுவிழாவில் திருவெம்பாவையின் ஈற்றடியைப் பாலிஎழுத்தில் எழுதிப் படித்தார்கள்.

—வி.ஜி.இராமச்சந்திரன்

### சரித்திரம்

பிரிட்டிஷ் பிரதமர் சேர் வின்ஸ்டன் சொர்ச்சில் திருமதி விஜயலஷ்மி பண்டிட்டிடம் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மாமியார், ஒருமுறைகேட்டார் நீங்கள் பிரிட்டிஷ் சரித்திரத்தைப் படித்திருக்கிறீர்களா'' இதற்கு விஜயலஷ்மிபண்டிட் அளித்த பதில்,

ஆம், மிகநன்ருகவே படித்திருக்கிறேன் ஆனல் இப்போதுஎங்கள்நாட்டுப் பிள்ளைகள் எங்கள் பாரதநாட்டு சரித்திரத்தையே விழுந்துவிழுந்து படித்துக் 'கொண்டிருக்கிறுர்கள்''

### வாக்குறுதியும் நிலவும்

வாக்குறுதிஒருமுழுநிலாபோன்றது. உடனேநிறைவேரு விட்டால் நாளுக்குநாள் அது தேய்ந்துவிடும்.

— ஜெர்மனியப் பழமொழி

### புண் ஆற—

காலில் சேற்றுப்புண் நீர்ப்புண் ஆகியவற்றுக்கு கடுக்காய் நல்மருந்து. கடுக்காயும் மஞ்சளும் சேர்த்து அரைத்து நன்ருகத் தடவினல் இரண்டே நாளில் அரிப்பெல்லாம்போய் புண் ஆறும்.


—இரா வேலுச்சாமி

### வீணை நாட்கள்

வீண் ஆக்கியநாட்களில் அதிகமாக வீண்ஆகியநாட்கள் சிரிக்காத நாட்களே.

-ஷாம்பேர்ட்


நவீன உல்லாசக் குடிசைகள்



எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
- எமது விசேஷமான ஐஸ் கிறீம்வகைகள்:
  - வனிலா ½ கலன் ரூபா 60/-
  - ஸ்ரோபரி ½ கலன் ரூபா 60/-
  - சொக்லேட் ½ கலன் ரூபா 70/-

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்

- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை
  (அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)
  குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-
  குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-
  பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்
- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூமிகா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறும் பழமொழிகள்

நமது முன்னோரின் வாழ்க்கை அனுபவங்களைப் பழமொழிகள் எனப்படும் வாய்மொழி இலக்கியங்களின் வாயிலாக நாம் நாளாந்தம் அறிந்து வருகின்றோம். பண்டைய நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்ற வரலாற்றுச் சான்றுகளின் மூலம் நாம் வரலாற்றுக் காலத்தை ஆராய்ந்து அறிந்து கொள்வதைப் போன்றே பழமொழிகளின் வாயிலாக நம் முன்னோரின் சமூக வாழ்க்கை முறைகளையும் அவர்களது நம்பிக்கைகளையும் அனுபவங்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்றவை பண்டைய அரசர்களினதும் உயர் குடிப் பிறந்த மேல் மக்களினதும் வரலாற்றைக் கண்டறிய உதவுபவை. ஆனால் பழமொழிகளோ ஒரு நாட்டின் இதயமான கிராமத்தின் குடிமக்களது நாகரிகங்களை, அவர்களின் கலாசாரம், பழக்க வழக்கம், பண்பு போன்றவற்றை நன்கு உணர்த்தும் காலக் கண்ணாடியாகும்.

நடராஜா செல்வராஜா

உதவி நூலகர், கல்வித் திணைக்களத்தின்
பண்பாட்டு நிறுவனம்.

நம் மூதாதையர் தம் வாழ்க்கை அனுபவங்களைச் சுருக்கமாக, பொருட்செறிவு மிக்க ஓரிரு சொற்றொடர்களின் மூலம் தம் சந்ததியினர்க்குப் பழமொழிகளின் உருவில் விட்டுச் சென்றுள்ளனர்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே தமிழ்ப் பழமொழிகள் தொகுத்து நூலுருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருக்கின்றன. 1848ம் ஆண்டில் வணக்கத்திற்குரிய பீட்டர் பேர்சிவல் பாதிரியார் அவர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் ''திருட்டாந்த சங்கிரகம்'' என்ற நூல் 1873 தமிழ்ப் பழமொழிகளுடனும், அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புடனும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலில் காணப்பட்ட பழமொழிகளின் பெரும் பகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் அக்காலகட்டத்தில் வழக்கிலிருந்தவையாகும். பேர்சிவல் பாதிரியாரைப் போன்றே வணக்கத்திற்குரிய லோங் பாதிரியார் அவர்கள் 1881ம் ஆண்டில் ''கீழைத் தேசப் பழமொழிகள்'' (Eastern Proverbs and Emblems) என்ற தலைப்பில் லண்டன் நகரில் ஒரு நூலைத் தொகுத்து வெளியிட்டார். அன்றைய காலகட்டத்தில் மிஷனரிமாருக்குக் கிராமங்களில் தமது சமயப் பிரசாரங்களை மேற்கொள்வதற்குப் பழமொழி இலக்கியம் பெரிதும் துணைசெய்துள்ளது.

## தமிழ்ப் பழமொழி

## அகராதி

பேர்சிவல் பாதிரியாரின் பழமொழித் தொகுதி நூலின் தொடர்ச்சி எனக் கருதப்படும் மற்றொரு நூலை 1894ம் ஆண்டளவில் ஜோன் லாசரஸ் என்ற அறிஞர் வெளியிட்டிருந்தார். ''தமிழ்ப் பழமொழி அகராதி'' என்ற அந்த நூல் 9500 பழமொழிகளைக் கொண்டிருந்தது.

20ம் நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ்ப் பழமொழித் தொகுப்பு நூல்கள் பல அறிஞர்களின் அரிய முயற்சியால் காலத்துக்குக் காலம் வெளிவந்துள்ளன. அனவரதவிநாயகம்பிள்ளை, வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அறிஞர்களின் இடையறாத முயற்சிகளினால் கர்ணபரம்பரையாகப் பிரதேச ரீதியாக வழங்கிவந்த இவ்வாய்மொழி இலக்கியம் நூலுருக்கொண்டு தமிழ் இலக்கிய உலகில் தனக்கென அழியாததொரு இடத்தைப் பிடித்துவிட்டது.

## பழமொழி வாசனை

## அருகிவருகிறது

20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய இன்று கிராமங்களிலும் கூட நடைமுறை உரையாடல்களில் பழமொழியின் வாசிப்பு அருகிவருவதைக் காணமுடிகிறது. 19ம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலும் பழமொழி இலக்கியம் பல்வேறு ஊடகங்கள் மூலம் மக்களிடையே புழக்கத்திலிருந்து வந்துள்ளதை இலக்கிய அறிஞர்களின் ஆய்வுகளிலிருந்து அறியமுடிகிறது. நாவல் இலக்கியத்தில், நாடகங்களில், நாட்டுக் கூத்துகளில் மட்டுமன்றிச் சாதாரண கிராமவாசிகளின் நாளாந்தப் பேச்சுவழக்கிலும் கூடப் பழமொழிகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை யாவும் காலப்போக்கில் பழமொழிகளை ஒதுக்கிவிட்டமையால் இன்று நூல்களில் மட்டுமே இடம்பெற்று ஏட்டுருக் கொண்டு ஒரு ஏட்டிலக்கியமாக மாறிவரும் சூழ்நிலை தோன்றியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் அண்மைக் காலங்களில் தோன்றிய புதிய அலைகள் பழமொழிகளைக் கரையில் ஒதுக்கிவருவதை இன்றைய சந்ததியினர் அவதானிக்கக்கூடும்.

வெகுஜன கலாசாரத்தின் வேகமான வளர்ச்சி உரைநடைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கிராமங்களில் இன்று நாளாந்தம் தமது உரையாடல்களில் பழமொழிகள் புகுத்தப்படுவது குறைந்துவருகின்றன. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பழமொழிகள் நகைச்சுவை உணர்வைக் கட்டும் வகையில் உரைநடையாக்கங்களில் புகுத்தப்பட்டன. வளர்ந்துவரும் கலாசாரத்தின் வேகத்தினால் இத்தகைய உரைநடைகள் வலுவிழந்து, அதன் பயனாகப் பழமொழி இலக்கியம் பொலிவிழந்துவிட்டது.

## உருமாறும்

## பழமொழிகள்

பழமொழிகளில் பல, இன்று அவற்றின் அசல் கருத்திலிருந்து வழுவி, புதுக் கருத்துக்களைப் பெற்றுப் புதுமொழிகளாகப் புழக்கத்தில் உள்ளன. எது அசல், எது நகல் என்று அறியமுடியாதபடி இருவகைக் கருத்தும் நடைமுறை பயன்பாட்டிற்கு ஏற்புடையதாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பழமொழிச் சொற்களில் காலப் போக்கில் ஓரிரு எழுத்துக்கள் சேர்வதாலோ அல்லது விடுபடுவதாலோ சொற்களில் இரட்டை அர்த்தம் தொனிப்பதாலோ இத்தகைய மருவல்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு. காலத்துக்குக் காலம் சமுதாயத்தில் ஏற்படும் கருத்து மாற்றங்களுக்கு ஏற்ப பழமொழிகளின் சொற்கள் நாசுக்காக மாற்றப்படுவதும் மருவல்களுக்குக் காரணமாகும்.

''மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா'' என்பது ஒரு பழமொழி. ஆற்றுக்குள் மண்ணினாலான குதிரையை நம்பி இறங்கினால் மண்குதிரை நீரில் கரைந்து விடுமாதலால் நடு ஆற்றில் தத்தளிக்க வேண்டி ஏற்படும் என்ற கருத்தை இப்பழமொழி கொண்டுள்ளதாகக் கருதுகிறோம். ஆனால் இந்த 'மண்குதிரை' என்பது 'மண் குதிர்' என்பதன் மருவலாகும். ஆற்றின் நடுவே நீரோட்டத்தினால் ஏற்படும் மண்திட்டிகளே மண் குதிர்களாகும். இத்தகைய மண் குதிர்கள் பார்வைக்கு மேடாக இருப்பினும் சொரிமாலானவை. இவற்றை நம்பி ஆற்றின் ஆழத்தை நோக்காது இறங்கலாகாது என்ற கருத்திலமைந்த பழமொழியே இதுவாகும். 'மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா' என்பதே பழமொழியாகும்.

இவ்வாறே ''ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன்'' என்றொரு பழமொழியுண்டு. இதை நகைச்சுவையுணர்வுடன் வைத்தியத்துறையைப் பரிகசிக்கும் போது பயன்படுத்துகிறார்கள். இப்பழமொழியின் அசல் 'ஆயிரம் பேரைக் கண்டவன் அரை வைத்தியன்' என்பர். வைத்தியத்துறையின் மேன்மையையும் அத்துறையில் ஈடுபட்ட

# சமுதாய கலாசாரத்தின்

# கண்ணாடியான பழமொழி

# இலக்கியம் இன்று

# ஏட்டிலக்கியமாக

# மாறிவருகிறது

# அதனைப்புதிய அலைகள்

# கரை ஒதுக்குகின்றன

வைத்தியனின் தகைமையின் உயர்வையும் விளக்கும் வகையில் இப்பழமொழி உருவாகியிருத்தல் வேண்டும்.

''குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்'' என்றொரு பழமொழியை இன்று பலர் தம் உரையாடலில் பிரயோகிக்கிறார்கள். மோதிரக்கையால் குட்டுப்படுவதில் அப்படி என்ன விசேஷம் உள்ளது என நாம் சிந்திக்கலாம். மோதிரக்கையை செல்வாக்குள்ள நபரைக் குறிக்கும் ஒரு பதமாகக் கொண்டே இப் பழமொழியைப் பிரயோகிக்கிறோம். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது சொற்பொழிவொன்றில் இப் பழமொழிக்கு அருமையானதொரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

மோதிரக் கை என்பது மோதுகிறதை என்ற சொற்றொடரின் திரிபாகும். மோதுகிறதை என்பது தன் சக்திக்கு நிகரான ஒருவனைக் குறிக்கும் ஒரு பெயராகும். அதாவது தன்னுடன் மோதுகிற ஒருவன் தன் சக்திக்கு நிகரானவனாக இருக்கவேண்டும் என்ற கருத்தையே மேற்படி பழமொழி கொண்டிருக்கின்றது என்பது வாரியாரின் வாதம்.

## 'படிதாண்டாள்'

## பத்தினி

இவ்வாறே பெண்களுக்குரிய பழமொழிகளிலொன்று ''படிதாண்டாள் பத்தினி'' என்பதாகும். 'படி' என்பது வீட்டு வாசற்படியைக் குறிப்பதாகாது. கீழ்ப்படிதல் என்ற பதத்தின் குறுக்கமான படிதலே படியாகியது என்பர் அறிஞர். பழமொழியின் கருத்து கணவனின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவளே பத்தினிப்பெண்ணாய்ப் போற்றப்படுபவளாவாள் என்பதாகும்.

## படையும் பத்தியும்

போர்க்களத்திலே வீரர்களின் அணிவகுப்பு நிரைகள் பல பெயர்களில் பல பகுதிகளாக வகுக்கப்பட்டிருந்தன. முன் நிரையை 'பத்தி' எனவும் பின் நிரையை 'படை' எனவும் வழங்குவர். ஒரு வீரன் போர்முனையில் எப்போதும் முன்னணி வரிசையான பத்தியிலேயே இருந்து போரிட விரும்பவேண்டும் என்ற கருத்திலேயே ''பத்திக்கு முந்து, படைக்குப் பிந்து'' என்ற பழமொழியை உருவாக்கினர் நம் மூதாதையர். வீர உணர்வுக்குரிய இப்பழமொழி இன்று நம்மூர்களில் சாப்பாட்டுப் பந்திக்கு முந்தவேண்டும் என்று நம்மை விரட்டியடிக்கிறது.

(15-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்

SHABRA

UNICO FINANCE LIMITED

நிலையான வைப்பிற்கு யாழ்.நகரில் அதியுயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்.

61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய புத்தகம்

நூல்: சாவித்திரி சரிதம்

ஆக்கியோன்: புலவர் வே. கனகசபாபதி

கிடைக்குமிடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

'சாவித்திரி சரிதம்' என்னும் இந்நூல் ஈழத்து இலக்கிய வரிசையில் என்றும் நல்லிடம் பெற்று இலங்கும். அரசகேசரி, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் முதலானவர் வரிசையில் புலவர் கனகசபாபதியின் பெயரும் நின்று நிலவும். கம்ப

## சாவித்திரி சரிதம்:

## தமிழ்பேசும் நல்லுலகிற்கு

## பெருமைதரும் நூல்

இராமாயணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய காவியங்களைப் போன்ற சந்தமும், அமைப்பும், பொருள் முடிப்பும் இந்நூலிலும் ஆங்காங்கு காணப்படும் போது இதனைப் படிப்பவர் பெருமகிழ்வு அடைவர் என்பதில் ஐயமில்லை. வருணனைகளும், கதைகளும் கருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பெற்றுள்ளன.

இக்காவியம் ஈழத்து இலக்கியத்தின் தனிப் பண்பு என்று அறிஞர் பாராட்டும் நற்பண்புகள் நிரம்பி விளங்குகின்றன.

கதைநிகழ்ச்சிக்கேற்ற நடை, இலக்கண வழுவின்மை, நற்றமிழ்வன்மை என்பன நிரம்பிய இக்காவியத்தின இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஈழத்துப் புலவன் ஒருவன் இயற்றினான் என்று எண்ணும்போது பொதுவாகத் தமிழ்பேசும் நல்லுலகும் சிறப்பாக ஈழமும் உள்ளத்தில் பெருமிதம் கொள்ளும்.

- பண்டிதன்


**ராணி** (யாழ். நகர்)

சக்கரவர்த்தி திருமகள்

**ராஜா** (யாழ்நகர்)

ஜெர்சங்கர் - விஜயா

பெண்ணே நீ வாழ்க

23-4-84 முதல்

மாயா பஜார்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)

மறுஅறிவித்தல் 10-30, 2-00 மணி மட்டும்

சிவாஜி — பாரதி

தங்கச் சுரங்கம்

(புதியபிரதி)

**மனோகரா** (யாழ். நகர்)

தினசரி 2 காட்சிகள்

கமலஹாசன் (இருவேடம்) ஸ்ரீதேவி

கல்யாணராமன்

(புதிய பிரதி கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)

A MID SUMMER NIGHT'S SEX COMEDY

வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் SEX நகைச்சுவை விருந்து

**வின்ஸர்** (யாழ். நகர்)

தினசரி 2 காட்சிகள்

ரவிச்சந்திரன்-விஜயா சோ-நாகேஷ் நடித்த

நினைவில் நின்றவள்

(முழுநீள ஹாஷ்யப்படம்)

**வெலிங்டன்** மானிப்பாய்

மறு அறிவித்தல் வரை 2-30 காட்சி மட்டும்

கமலஹாசன்-லிஸ்சுமிதா

சகலகலாவல்லவன்

**நீகல்** (யாழ். நகர்)

காலை 10-30, 2-00 மணிக் காட்சிகள் மட்டும்.

TEN. SEX

(Color)

(Strictly for Adults only)

**லிடோ** (யாழ்நகர்)

ரவீந்தர் - ரூபா

ஒரு தலை ராகம்

**வெலிங்டன்**

தினசரி 10-30 2-15 4-15

JAMES BOND FAME

Roger Moore in

ESCAPE TO ATHENA

(Action packed thriller)

நாளைமுதல்

ஒருகை ஓசை



## Post of Steno/Typist

An established Manufacturing Company in Jaffna requires applications from experienced stenographers.

High proficiency in English and Steno/Typing are required.

SALARY: Attractive and Negotiable.

Write immediately giving full bio-data and other details.

Advt. No: 389, C/o Eelanadu, Ltd., Jaffna.



# FINANCIAL ASSOCIATION

**402 1/2, K. K. S. Road, Jaffna.**

(Near Sivan Temple)

(COMPRISING TECHNICAL COURSES)

## New Admission for 84/85

(A) CITY and GUILDS OF LONDON EXAMINATION PART I and II

Qualification:- G. C. E. O/L six Subjects with Credit pass in English, Maths, and Science.

3 YEAR COURSES

1. Telecommunication Technician (271)
2. Electrical Engineering Practice (803)
3. Mechanical Engineering Technicians (255)
4. Electrical Technicians (280)
5. Electrical Technicians Power (281)
6. Motor Vehicle Technicians (390)
7. Radio Television and Electronics Technicans (270) (1 Year)

6 MONTHS

(B) 1. Telex Operaters 2. Electrical welding
3. Diploma in Quantity Surveying
4. Electrical wiring 5. Shorthand Typewriting

Qualification:- G. C. E. 6 Subjects (pass)

1 YEAR

(C) Diploma in Building Construction

Qualification:- G. C. E. A/L 4 Subjects (pass)

Application Closing Date:- 3rd May, 1984
Courses Commence on: 5th May, 1984 at 9 a. m.

(D) E.C.E. (C.E.I.) Part — I (New Syllabus)

4-th BATCH

Date of Commencing:- 28th April 1984 at 7 a. m.

E C. E. (C E I.) Part — II

Date of Commencing:- 28th April 1984 at 8-15 a m

★ Library, Lab. Practical Facilities Available.
★ Limited Accomadation So Entrol early.
★ Courses:- Day Batches and weak-end Batches.

விபரங்கட்கு:
பணிப்பாளர்,

## (F) பைநான்சியல் அசோசியேசன்,

**402 1/2, K K S வீதி, யாழ்ப்பாணம்.**


## கல்வியைப் பற்றி

## இஸ்லாம்

மனிதனுடைய உயரிய அந்தஸ்து கல்வி எனும் செல்வமேயன்றி வேறு எதுவுமில்லை. மனிதன் பூரணமானவனாகத் திகழுவதற்குக் காரணம் அவன் பெற்ற கல்வியே "மனிதன் மனிதனாக மட்டுமன்றிப் புனிதனாகவும் திகழவேண்டும். இதற்குக் கல்வி எனும் கயிற்றைப் பலமாகப் பற்றிக் கொள்ளுங்கள்" என்று நமது முன்னோர்களும் கூறியுள்ளார்கள்.

"கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள் அது சீனா போன்ற பிரதேசத்தில் கிடைப்பதாயினும் சரியே" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளதாக ஹஜ்ரத் அபூஹீரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்.

கல்வி கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லீமின் மீதும் கடமையாக இருக்கின்றது. ஒவ்வொரு மனிதனது உள்ளமும் மூளையும கல்வியைக் கொண்டு அடையும் பக்குவத்தைப் போல வேறு எதிலும் அடைவதில்லை. இஸ்லாமின் அஸ்திவாரம், இஸ்லாமின் ஒழுக்குமுறை இஸ்லாமின் செயல்முறை ஆகியவற்றைக் கற்றுத் தேர்வது எவருக்கும் இல்லாமிற்கும் கல்விக்கும் எவ்வளவு நெருக்கமான தொடர்பு உண்டு என்பதை அறிந்து கொள்வார்கள்.

கல்வியைப்பற்றி நமது முன்னோர்கள், கல்விமான்கள், சான்றோர்கள் பலவாறு போற்றிப்புகழ்ந்துள்ளார்கள். கல்வியைப் பற்றி அபூபக்கர் (ரலி) பின்வருமாறு கூறுகின்றார்கள். கல்வி நபிமார்களுடைய சொத்தாக இருக்கின்றது ஆனால் பொருள் நிராகரிப்போர் (காபிர்) களுடைய சொத்தாக இருக்கின்றது. ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் "கல்வி கற்க விரும்புவோருக்கு கல்வியைக் கற்றுக் கொடுப்பது வழிகாட்டியின் கரத்தினிலே வாளைக் கொடுப்பது போன்றதாகும்" எனக் கூறியுள்ளார்கள்.

-முகமது சுல்தான்
-ஜினூஸ்

## உருமாறும்

(14-ம் பக்கத் தொடர்ச்சி

வையான பழமொழிகள் பல இன்று தமிழ்ப் பிரதேசங்களில் பரந்து செறிந்து காணப்படுகின்றன முதியோர்களின் வாய்களில் இன்றும் வழக்கிலுள்ளன. அவற்றில் சில தற்கால சந்ததியினரின் கலாசாரத்தினதும், பண்பாட்டினதும் மாற்றத்துக்கேற்பத் திரிபடைந்து உருத்து மாற்றம் பெற்று வழக்கிலுள்ளன.

### உதயதாரகையும்

### ஈழகேசரியும்

1841ம் ஆண்டு முதலாக 'உதயதாரகை', 'ஈழகேசரி' போன்ற தமிழ்ப் பத்திரிகைகள் பழமொழிகளுக்கு முக்கியத்துவங்கொடுத்து அவற்றைச் சேகரித்துக் காலத்துக்குக் காலம் வெளியிட்டுவந்துள்ளன. அந்தப் பத்திரிகைகளின் அரும்பெரும் சேவை காரணமாக இன்று தமிழ் இலக்கியத்தில் பழமொழி இலக்கியம் அழியாத இடம்பெற்றுள்ளது.

பழமொழிகளின் மருவல்களையும், இன்றைய புதுமொழிகளின் இலக்கணையும் நுனித்து நோக்குவதன்மூலம் எமது சமுதாய பாரம்பரியங்களையும், கலாசார எச்சங்களையும் இனங்காண முடியுமல்லவா?

மிஷனரிமார்கள் அன்றைய தேவையின் காரணமாக மேற்கொண்ட முயற்சிகள் இன்று மீண்டும் தொடரப்படுவது நல்லது ஏறத்தாழ மூன்று தசாப்தங்களின் முன்னர் வட்டுக்கோட்டை மு இராமலிங்கம் இம்முயற்சியில் முன்னின்று உழைத்ததை இன்று எவரும் மறந்திருக்கமாட்டார்கள்

பழமையையும் புதுமையையும் இணைந்து நோக்கவும், எமது சமுதாயத்தின் அடிநிலை மரபுகளை உள்ளுணர்வுபூர்வமாக விளங்கிக்கொள்ளவும்" இன்றைய தலைமுறையினருக்குக் கலாசார எச்சங்களை நினைவூட்டவும் சமுதாயவியல் ரீதியான பல ஆய்வுகளுக்குரிய தரவுகளை வளமாகப் பேணி வைத்துள்ள வாய்ப்பான சாதனம் பழமொழி இலக்கியம் என்பதை நாம் மறந்துவிடலாகாது.


### விளம்பரம்

## சாக்கு விற்பனை

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 800/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 28-4-84 சனிக்கிழமை காலை 10 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப்பெட்டியில் இடவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் 28-4-84ல் முழுப் பணத்தையும் செலுத்தி சாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொது முகாமையாளர்

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம் 1956

21-4-84.



மாணவ மாணவிகளே

## G.C.E. O/L (டிசம்பர் 84)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

● பகல்நேர பிரிவுகள் ●

ஆரம்பம்: 30-4-84 காலை 8-30

● வார இறுதிப் பிரிவுகள் ●

ஆரம்பம்: 28-4-84 காலை 9-00

கட்டணம் சகல பாடங்களுக்கும்

40/- மட்டுமே

## G.C.E. A/L 85/86

● கலை. வர்த்தக பிரிவுகள் ●

ஆரம்பம்: 28-4-84 காலை 9-00

4 பாடக் கட்டணம்

40/- மட்டுமே

● விஞ்ஞான பிரிவுகள் ●

ஆரம்பம்: 28-4-84 காலை 9-00

4 பாடக் கட்டணம்

50/- மட்டுமே

குறிப்பு: ஈழத்தின் தலைசிறந்த பட்டதாரி விரிவுரையாளர்களையும் (நிரந்தரமான) ஆய்வுகூட, நூல்நிலைய வசதிகளையும் உள்ளடக்கிய ஒரே ஸ்தாபனம்.

விபரங்கட்கு:

# Financial Association

402 1/2, K.K.S. ROAD, (சிவன்கோவிலடி) JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

